Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, JUNE 11, 2022

சனிக்கிழமை ஜூன் 11, 2022 | ஒளி: 08 கதிர்: 020 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## திங்கள் விடுமுறை

ஜூன் 13ஆம் திகதி திங்கட்கிழமை விசேட அரசாங்க விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான சுட்டறிக்கை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நேற்று (10) விடுக்கப்பட்டுள்ளது.

# ஐ.எம்.எப்பின் குழாம் 20 இல் வருகிறது



**கடன் பேண்தகைமை உறுதியாக இல்லாத காரணத்தால், உறுதிமொழிகள் அவசியம்**

**வேலைத்திட்டங்கள், கொள்கை மட்டத்திலான கலந்துரையாடல் முன்னெடுக்கப்படும்**

இலங்கையுடன் பணியாளர் மட்டத்திலான உடன்படிக்கை ஒன்றினை செய்துகொள்ளும், பெற்றுக்கொடுக்கப்படும் கடன் பெறுமதி குறித்து தெரிவிக்கும் திகதியை அறிவிக்கமுடியாது உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஐ.எம்.எப்பின் அதிகாரிகள் குழாமொன்று இலங்கைக்கு எதிர்வரும் 20ஆம் திகதியன்று விஜயம் செய்யவுள்ளதாகவும் அதன் பேச்சாளர் கெரி ரைஸ், வொஷிங்டனில் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

ஐ.எம்.எப்பின் பிரதிநிதிகளின் மூலமாக அதிகாரிகள் மட்ட சந்திப்பொன்றை நடத்துவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளோம். இதன்போது தொழில்நுட்ப மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட ஐ.எம்.எப் வேலைத்திட்டங்கள், கொள்கை மட்டத்திலான கலந்துரையாடல் முன்னெடுக்கப்படும் என்றார்.

அதிகாரிகள் மூலமாக முன்வைக்கப்படும் கொள்கை மட்டத்திலானதும் அதேபோல் அர்ப்பணிப்பு தன்மைக்கு அமையவே பணியாளர் மட்டத்திலான உடன்படிக்கையின் கால எல்லை குறித்து தீர்மானிக்கப்படும். கடன் பேண்தகைமை உறுதியாக இல்லாத காரணத்தால் கடன் பேண்தகைமை மீளுருவாக்கும் விதமாக எமது நிறைவேற்று குழுவுக்கு போதியளவிலான உறுதிமொழிகள் அவசியம் என்றே கருதுகின்றோம் எனத் தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2



## தாமரை மொட்டுடன் இணைந்தார் தம்மிக

பிரபல வர்த்தகரான தம்மிக பெரேரா, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்டு, அதற்கான அங்கத்துவ அட்டையை பெற்றுக்கொண்டார். இந்நிலையில், தம்மிக பெரேராவின் பெயர், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### முகக்கவசம் அணிய வேண்டும்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்து

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டில் உள்ள காரணத்தால் பொதுமக்கள் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கையுடன் தாம் உடன்படமாட்டோம் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து தெரிவித்துள்ள அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன, கொரோனா வைரஸ் பரவல் முழுமையாக கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படவில்லை.

தொடர்ச்சி P2

## 6 மாத சிசுவின் சடலம் மீட்பு

துவாரகஷான்

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகசேனை வலகா தோட்டத்துக்கு செல்லும் பிரதான வீதியில் ஆறுமாத சிசுவின் சடலத்தை நேற்று (10) காலை 11 மணிக்கு லிந்துலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கிடைத்த தகவலை அடுத்து, சிசுவின் சடலத்தை மீட்டெடுத்த பொலிஸார், பிரேத பரிசோதனைக்காக, நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்துவிட்டு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## பொறுப்புக்கூறல் அவசியம்

### இல்லையேல் நாடாக முன்னோக்கிச் செல்ல முடியாது என்கிறார் அமெரிக்க தூதுவர்



அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் என்பவற்றை இலங்கை கையாள வேண்டும் என நாமோ அல்லது சர்வதேச சமூகமோ கூற முன்னர் இலங்கை மக்களே வலியுறுத்தினர். சகல இன, மத மக்களின் உரிமைகளையும் பாதுகாக்காது விட்டால் நாடாக முன்னோக்கி செல்ல முடியாது என இலங்கைக்காக அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற வடக்கு

தொடர்ச்சி P2



## இலங்கைக்கு நிதியுதவி செய்யுங்கள்

### சிங்கப்பூரிடம் அமைச்சர் ஜீ.எல் கோரிக்கை

பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில் இலங்கைக்கான நிதியுதவியைப் பெறுவதற்கும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதற்கும் சிங்கப்பூர் அரசாங்கத்திடம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உதவிகளை கோரியுள்ளார்.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஷ்ணனின் அழைப்பில், சிங்கப்பூருக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜி.எல்.பீரிஸ், இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடியுள்ளார்.

தொடர்ச்சி P2

### துரதிர்ஷ்டவசமாக

## இலங்கை நல்லதொரு வாய்ப்பை இழந்துள்ளது

### அமெரிக்க தூதுவர் ஜூலி சங்

எம்.சி.சி உடன்படிக்கையை இனிமேல் இலங்கையில் முன்னெடுக்கப்போவதில்லை. அதனை வேறு ஒரு நாட்டிற்கு வழங்கியுள்ளோம். துரதிர்ஷ்டவசமாக இலங்கை நல்லதொரு வாய்ப்பை இழந்துள்ளது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பகலில் இ.போ.சவுக்கு இரவில் தனியாருக்கு



பொதுப் போக்குவரத்து சேவைகளை வினைத்திறன் மற்றும் தரம் வாய்ந்ததாக பேண வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார். எரிபொருள் விலை உயர்வால் மக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். அதேவேளை, பொதுப் போக்குவரத்துக்கு அதிக தேவை இருப்பதால், அதற்கு வசதிகளை வழங்குவதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சாணக்கியன் மன்னிப்பு கோர வேண்டும்



பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளின் வீடுகள் மீது மே 9 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல்கள், பிரதேசவாசிகளால் நடத்தப்படவில்லை எனவும், வெளி இடங்களில் இருந்து வந்தவர்களே தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்துள்ளார்.

எனினும், தாக்குதல்களின் பின்னர் பாராளுமன்றத்தில் அதனை ஏற்றுக்கொள்ளும் வகையிலேயே சாணக்கியன் எம்.பி கருத்துகளை வெளியிட்டதாகவும், இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும், இதனால் அவர் அந்தக் கருத்துக்கு சாணக்கியன் கோருவதுடன்,

தொடர்ச்சி P2

## வன்முறை சக்தியொன்று தோற்றம் பெற்றுள்ளது



பொருளாதர நெருக்கடி மக்கள் மத்தியில் குழப்ப நிலையை ஏற்படுத்தும் என்பதே உண்மை. ஆனாலும், மக்களின் கோபத்தை வன்முறையாக மாற்றிவிடும் சக்தியொன்று நாட்டில் தோற்றம் பெற்றுள்ளதாக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரல தொடர்பான அனுதாப பிரேரணை மீது பாராளுமன்றில்

தொடர்ச்சி P2

## கல்வி அமைச்சுக்கு முன்...

பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சுக்கு முன்பாக, பல்கலைக்கழக மாணவர் சம்மேளன உறுப்பினர்கள் நேற்று (10) மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகம் மேற்கொண்டு, கலைத்தனர்.




## மே.9 நாட்டுக்கு கறுப்பு கறை



அமரகீர்த்தி அத்துகோரலவின் கொலையை வன்மையாகக் கண்டிப்பதுடன் அந்தத் தினம் நாட்டுக்கு கறுப்பு கறையை ஏற்படுத்திய தினமாகவே பார்கின்றோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (10) இடம்பெற்ற, காலம் சென்ற அமரகீர்த்தி அத்துகோரலின் மறைவு தொடர்பான அனுதாப பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பட்டார்.

அமரகீர்த்தி அத்துகோரலவின் கொலை தொடர்பாக முறையாக விசாரணை நடத்தி, குற்றவாளிகளை சட்டத்துக்கு முன்பாக நிறுத்த வேண்டும். இந்தக் கொலை தொடர்பில் விரைவாக விசாரணை நடத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஐ.எம்.எப்பின் குழாம் 20இல் வருகிறது

உலக உணவு நெருக்கடி மற்றும் வலுசக்தி நெருக்கடி நிலைமைகள் காரணமாக இலங்கை மக்களுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் குறித்து நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். எம்மால் முடிந்த உதவிகளை செய்ய நாம் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டும் வருகின்றோம் என்றார். ஆனால் இந்த நெருக்கடி நிலைமைகளின் போதும் எம்மால் செய்யமுடிந்த நிதி உதவிகள் மற்றும் உடன்படிக்கைகள் குறித்த கால எல்லை தொடர்பில் அறிவிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



# தாமரை மொட்டுடன் இணைந்தார் தம்மிக

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் வெற்றிடமாக இருக்கும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நிரப்பவே, தம்மிக்கவின் பெயர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல், வெளியானதன் பின்னர் அவர், எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துக்கொள்வார்.

அத்துடன்,தான் வகிக்கும் சகல பதவிகளில் இருந்தும் விலகியதன் பின்னரே எம்.பி பதவியை ஏற்றுக்கொள்வேன் எனவும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவிடம் அவர் தெரிவித்திருந்துள்ளார்.

அதுமட்டுமன்றி, அவருக்கு முக்கியமான அமைச்சர் பதவியொன்றும் வழங்கப்படவுள்ளதாகவும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறக்கும் வகையிலேயே தம்மிக்க பெரேரா, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்குள் இணைத்துக்கொ ள்ளப்பட்டுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கை நல்லதொரு வாய்ப்பை இழந்துள்ளது

எம்.சி.சி உடன்படிக்கை மூலமாக 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக இதன்மூலம் இலங்கைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது. இது கிடைத்திருந்தால் இன்று நாட்டு மக்களுக்கு பயனுள்ளதாக அமைந்திருக்கும். ஆனால் பொய்யான செய்திகளை பரப்பி மக்களை குழப்பியதன் மூலமாக நல்ல வாய்ப்புகளை இலங்கை இன்று இழந்துள்ளது என்றே கூற வேண்டியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையில் வேறு புதிய உடன்படிக்கைகள் எதுவும் இப்போது வரையில் செய்துகொள்ளப்படவில்லை. எனினும் எதிர்காலத்தில் புதிய உடன்படிக்கைகள் செய்துகொள்ள முடியும். அமெரிக்க நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளை செய்ய ஆர்வமாக உள்ளனர். அதற்கு முன்னர் இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு அமையும் பட்சத்தில் எமது அரசாங்கத்தின் உதவி மட்டுமல்ல பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் என்றார்.

# பொறுப்புக்கூறல் அவசியம்



மக்களின் கேள்விக்கு பதில் தெரிவித்தாக வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த மே 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பொதுமக்களின் அமைதியான போராட்டங்களை குழப்பும் இவ்வாறான வன்முறைகளை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். அதுமட்டுமல்ல மாற்றம் ஒன்று வேண்டும் என மக்கள் வலியுறுத்துகின்றனர். அதனை கருத்தில்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் நிலையான, ஜனநாயக நாடொன்றை கட்டியெழுப்ப வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அவ்வாறான ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என்பதே எமதும் விருப்பமாக உள்ளது. இந்த பொதுவான நோக்கத்திற்காக சகலரும் செயற்பட வேண்டும். நாடாக ஐக்கியப்படவும், சரியான பாதையில் பயணிக்கவும் இதுவே சரியான தருணம் என கருதுகின்றோம்.

ஜனநாயகத்தை பலப்படுத்த வேண்டுமாயின் நாட்டில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். சட்ட ஒழுங்கு பின்பற்றப்பட வேண்டும். ஊடக சுதந்திரம் காணப்பட வேண்டும். இலங்கை விடயத்தில் அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் என்பவற்றை கையாள வேண்டும் என நாமோ அல்லது சர்வதேச சமூகமோ கூற முன்னர் இலங்கை மக்களே வலியுறுத்தி வருகின்றனர். இந்த நாட்டில் சகல இன, மத மக்களின் உரிமைகளையும் பாதுகாக்காது விட்டால் நாடாக முன்னோக்கி செல்ல முடியாது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற வடக்கு மக்களின் கேள்விக்கு பதில் தெரிவித்தாக வேண்டும். இதனை அறியவே பல்வேறு சுயாதீன ஆணைக்குழுக்கள், அமைப்புகள் உருவாக்கப்பட்டு சுயாதீனமாக அவர்களின் பணியை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

# பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்து

இன்றும் பல்வேறு நாடுகளில் மீண்டும் வைரஸ் தாக்கத்திற்கு மக்கள் முகங்கொடுத்து வருகின்றனர். இவ்வாறான நிலையில்

கொரோனா பேரிடரை ஒழிக்காமல், இதுபோன்ற தீர்மானங்களை கட்டாயமாக்கக் கூடாது என தெரிவித்துள்ளார்.

ஆகவே பொதுமக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள பொது இடங்களில் முகக்கவசம் அணிவதும், சமூக இடைவெளியை பின்பற்றுவதும் அத்துடன் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதும் அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வன்முறை சக்தியொன்று தோற்றம் பெற்றுள்ளது



நேற்று (10) நடைபெற்ற விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யுத்த காலத்தில் 30 வருடங்களாக மரண பயத்துடனேயே எம்.பிக்கள் வீதிகளில் சென்றனர். 2009 மே 19 ஆம் திகதிக்குப் பின்னர் பயங்கரவாதம் அற்ற நாடாக்கி மக்கள் அச்சமின்றி வீதிகளில் செல்லும் நிலை உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அந்த நிலைமை மாறியுள்ளது. அமரகீர்த்தி அதுகோரல எம்.பியின் கொலை சம்பவத்தை தொடர்ந்து இந்த பாராளுமன்றத்தின் எம்.பிக்கள் மரண அச்சத்துடனேயே வீதியில் செல்கின்றனர்

மக்களிடையே பொருளாதார நெருக்கடியால் வேதனை மற்றும் அதிருப்தி நிலைமை உருவாகியுள்ளது என்பது உண்மையே ஆனால் அது கொலை, வீடுகளுக்கு தீ வைத்தல் போன்ற சம்பவங்கள் வரையில் செல்வதற்கு இதற்கு பின்னால் இருந்து சிலர் செயற்படுவதனாலேயே ஆகும். மக்களிடையே இவ்வாறு வன்முறைகளை கொண்டு செல்லும் அரசியல் சக்திகள் இப்போது உருவாகியுள்ளன. ஜனநாயக ரீதியில் இருக்கும் மக்களை அச்சுறுத்தும் வகையில் செய்யப்பட்ட கொலையே இது. அன்று போராட்டக் களத்தில் இருந்த மதத் தலைவர்கள் கூட இந்த கொலைகளை தடுக்க முயற்சிக்கவில்லை. அதனை கண்டிக்கவும் இல்லை. இதனை கூறுவதற்கும் மக்கள் அச்சத்தில் இருக்கின்றனர் என்றார்.

# பகலில் இ.போ.சவுக்கு இரவில் தனியாருக்கு

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் (09) பிற்பகல் இடம்பெற்ற போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

புகையிரதங்கள் மற்றும் பேருந்துகளுக்கு தொடர்ச்சியாக எரிபொருளை வழங்கும் பொறிமுறையொன்றின் அவசியம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. போக்குவரத்து சபைக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக தனியார் பேருந்துகளுக்கு இரவு வேளைகளில் எரிபொருள் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.



(Park & Drive) முறையை விரிவுபடுத்தவும், அதற்காக வாகனத் தரிப்பிட கட்டணத்தைக் குறைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட புகையிரத நிலையங்களுக்கு அருகாமையில் வாகனத் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயுமாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள ஒன்றிணைந்த நேர அட்டவணை முறையை குறுகிய பயண சேவைகளுக்கும் பயன்படுத்த முன்மொழியப்பட்டது.

அலுவலக சேவைகளை இலக்காகக் கொண்டு புதிய புகையிரத சேவைகளை தொடங்கவும் தற்போது இயக்கப்படும் புகையிரதங்களுக்கான பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

# சாணக்கியன் மன்னிப்புக்கோர வேண்டும்

கருத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (10)நடைபெற்ற, மே 9 வன்முறை சம்பவத்தில் கொல்லப்பட்ட அமரகீர்த்தி அதுகோர எம்.பியின் அனுதாப பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே பிரதமர் இவற்றை தெரிவித்தார்.

இந்த தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது. அதனை செய்தது யார்? என்று விசாரணைகள் நடத்தப்படுகின்றன. அதேபோன்று குமார் வெல்கம மீதும் ஏன் தாக்குதல் நடத்தப்பட்டது. கோட்டாபயவை வீட்டுக்கு போகுமாறு கூறிய முதலாவது நபர். ஏன் அவருக்கு தாக்குதல் நடத்த வேண்டும். இது தொடர்பில் தகவல்களை நான் தேடியுள்ளேன். ஹோமாகமவில் தாக்குதல் நடத்தப்பட்டாலும் அங்குள்ளவர்கள் அதனை செய்யவில்லை. வெளியில் இருந்த வந்தவர்களே தாக்குதல் நடத்தியுள்ளனர். இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றார்.

இதேவேளை மே 20 ஆம் திகதி சாணக்கியன் எம்.பி சம்பவங்களை அனுமதிப்பது போன்று கருத்துக்களை

> **ஹோமாகமவில் தாக்குதல் நடத்தப்பட்டாலும் அங்குள்ளவர்கள் அதனை செய்யவில்லை. வெளியில் இருந்த வந்தவர்களே தாக்குதல் நடத்தியுள்ளனர். இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.**

வெளியிட்டிருந்தார். 20 ஆவது திருத்தம் போன்ற நாட்டுக்கு பாதிப்பான விடயங்கள், வரவு- செலவுக்கு ஆதரவு வழங்கியதனாலேயே அவர்களின் வீடுகளுக்கு தாக்குதல் நடத்தப்பட்டதாக சாணக்கியன் கூறியுள்ளார்.

எப்படி எம்.பியொருவரால் இப்படி கதைக்க முடியும். வீடுகளுக்கு தீ வைப்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?. பாராளுமன்றத்தை சுற்றிவளைக்கும் போது தங்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று கூறுகின்றார். இதனால் அவரின் அந்த உரைக்கு மன்னிப்பு கூறி, அவர் அதனை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால் இது தொடர்பில் சபாநாயகர் சம்பந்தப்பட்ட குழுவுக்கு போட்டு அது தொடர்பில் நடவடிக்கை எடுத்து அறிக்கையை வழங்குமாறு கேட்கின்றேன் என்றார்.





# இலங்கைக்கு நிதியுதவி செய்யுங்கள்

இலங்கைக்கான நிதியுதவியைப் பெறல், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரித்தல், சிங்கப்பூருக்கான இலங்கை ஏற்றுமதிகளுக்கான வாய்ப்புக்களை அதிகரித்தல், உள்ளிட்டவற்றுக்கான உதவிகளையும் ஜி.எல்.பீரிஸ் கோரியுள்ளார்.

அத்துடன், இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க சிங்கப்பூர் அரசாங்கத்தின் ஆதரவையும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தேவையான மருத்துவப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்கியதன் மூலம் இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்பு பிரதிபலிப்பை ஆதரிக்கும் வகையில் கொவிட்-19 தொற்றுநோய் முழுவதும் நீட்டிக்கப்பட்ட விரிவான உதவிகளுக்காகவும், சிங்கப்பூர் மற்றும் வெளிநாடுகளில் டெமாசெக் அறக்கட்டளை மூலம் இலங்கைக்கு முகக்கவசங்களை வழங்கியமைக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கம் மனிதாபிமான உதவிக்காக அண்மையில் செய்த வேண்டுகோளுக்கு சிங்கப்பூர் அரசாங்கம் 100,000 அமெரிக்க டொலர்களை உறுதியளித்தமைக்கும் நன்றி கூறினார்.

# உற்பத்தியாளரும் நாமே; நுகர்வோரும் நாமே

## ‘கண்டுகாலி வேண்டிக் கொண்டு வாங்கோ....”



பாலகிருஸ்ணன் சிவரஞ்சன்







**கடந்த வாரம், மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் நிரப்புவதற்காக, யாழ். நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில், நீண்ட வரிசையில் காத்திருந்தேன். எனக்கு அருகில் நின்றவரை அறிமுகம் இல்லாவிட்டாலும், நாட்டின் பொருளாதார பிரச்சினையைப் பற்றிக் கதைத்து, அறிமுகம் ஆகிக் கொண்டோம்.**

எமது எரிபொருள் வரிசை, ஆமை வேகத்தில் நகர்ந்தது. அவ்வேளை, நண்பருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. உரையாடல் முடிந்ததும் அவரது முகத்தில், ஒருவித மகிழ்ச்சி தென்பட்டது. “என்ன அண்ணை முகத்தில் ஒளிவட்டம் தெரியுது” எனக் கேட்டேன்.

“ஓம். சுகந்தி (மனைவி) கதைத்தவா. வீட்டுத் தோட்டம் செய்யப் போறாவாம். வரும் போது காய்கறிச் செடிகள் வாங்கிக் கொண்டு வரட்டாம்” என்றார். ஆனாலும், இது ‘சுடலை ஞானம்’ என்று கூறிப் பெருமூச்சு விட்டார்.

நானும் அவரை விட்டபாடில்லை. “ஏன்” என்றேன்.

“நான் எத்தனையோ வருடக்கணக்கில், இதை எங்கள் வீட்டில் கூறி வருகின்றேன். அதெல்லாம் ‘செவிடன் காதில் ஊதிய சங்கு’ போலவே இருந்தது. ஆனால், இன்று நாடு கடுமையான பொருளாதாரச் சிக்கலுக்குள் மாட்டிக் கொண்ட பிறகுதான் வீட்டுத் தோட்டம் பற்றிக் கதைக்கினம்” என்றார்.

”சரி! பழைய கதைகளை விட்டு விடுங்கள். இனி நடப்பதைப் பார்ப்போம்” என்று அவரை ஆறுதல்படுத்தினேன்.

‘அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை’ என்றே முதுமொழியும் சொல்கின்றது. ஆம்! இன்று நாட்டின் பொருளாதார நிலைமை படுகுழியில் வீழ்ந்து உள்ளது. இவ்வாறான நிலை ஏற்பட்டதற்கான வாதப்பிரதிவாதங்களை சற்று ஒதுக்கி வைத்து விட்டு, இதிலிருந்து மீள்வதற்கான வழிவகைகளை கண்டு பிடிப்பதும் அவற்றை உடனடியாகச் செயற்பாட்டுக்குக் கொண்டு வருவதுமே காலத்தின் தேவையாக உள்ளது.

நெல் வேளாண்மையை மேற்கொள்ள,வயல் நிலங்கள் தேவை. அனைத்து மக்களிடமும் வயல் காணிகள் இருக்க மாட்டா. ஆனால், வீட்டுத் தோட்ட செய்கையை கணிசமான மக்களால் மேற்கொள்ள முடியும்.

நமது நாட்டில், தொடர் மாடிக் குடியிருப்புகளில் வாழ்பவர்களைத் தவிர, அனைத்து மக்களும் உடனடியாக வீட்டுத் தோட்டச் செய்கையை ஆரம்பிக்க வேண்டும்.

உரம், எரிபொருள் என்பன இல்லை என்ற நிலை உள்ளது. அடுத்து, மின்சாரம் எப்போது போகும்? எப்போது வரும் எனத் தெரியாது. இந்நிலையில், நடுத்தர அல்லது பாரிய தோட்டச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலைவரம் உள்ளது. ஆகவே, ஒரு தோட்டச் செய்கையாளரால் தனது உற்பத்திப் பொருட்களை பல நுகர்வோர்களுக்கு வழங்க முடியாத நிலை உள்ளது.

எங்கள் சுற்றுப்புறங்களில் காணப்படுகின்ற உக்கிய குப்பைகள், சருகுகள், கால்நடை சேதனப் பசளைகளைப் பயன்படுத்தியும் மின்சாரத்தில் இயங்கும் நீர்ப் பம்பிகளைப் பயன்படுத்தி அல்லது கிணற்றிலிருந்து நேரடியாக தண்ணீரை ஊற்றி, சிறிய அளவிலான வீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொள்ள முடியும்.

> **பணம் என்ற எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதனம் வருவதற்கு முன்னர், பண்டமாற்று முறையே பயன்படுத்தப்பட்டு வந்தது. அதுபோலவே, நாம் தக்காளிப் பழத்தைப் பயிரிட்டு நாமும் பயன் பெற்று மிகுதியானவற்றை பிறருக்கு வழங்கி, அவரிடமிருந்து கத்தரிக்காயையோ மிளகாயையோ பெற்றுக் கொள்ளலாம்**

ஆகையால், எமக்குத் தேவையான சில விவசாயப் பொருட்களையாவது எங்களால் உற்பத்தி செய்ய முடியும். அதாவது, உற்பத்தியாளரும் நாமே நுகர்வோரும் நாமே. அத்துடன் எங்கள் காணியில், எங்கள் குடும்ப அங்கத்தவர்களால் இரசாயக் கலப்புகள் அற்ற, விவசாய உள்ளீடுகளைக் கொண்டு செய்கை பண்ணப்பட்ட காய்கறிகளை உண்பதன் மூலம், பல நன்மைகள் காணப்படுகின்றன.

மேலும், பணம் என்ற எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதனம் வருவதற்கு முன்னர், பண்டமாற்று முறையே பயன்படுத்தப்பட்டு வந்தது. அதுபோலவே, நாம் தக்காளிப் பழத்தைப் பயிரிட்டு நாமும் பயன் பெற்று மிகுதியானவற்றை பிறருக்கு வழங்கி, அவரிடமிருந்து கத்தரிக்காயையோ மிளகாயையோ பெற்றுக் கொள்ளலாம்.

இன்றைய இயந்திரமயமான வாழ்க்கை முறையும் உணவுப் பழக்கவழக்கங்களும் கணிசமான மக்களுக்கு நீரிழிவு நோயை பரிசாக வழங்கி விட்டது. இந்நிலையில் ஒரு கல்லில் இரு மாங்காய்கள் போல, வீட்டுத் தோட்டச் செய்கை சிறப்பானதும் எளிமையானதுமான உடற்பயிற்சியாகவும் உள்ளது.

ஏற்கெனவே உளவியல் நெருக்கீடுகளோடு வாழ்ந்த எங்கள் சமூகத்துக்குள், தற்போதைய பொருளாதார நெருக்கடி மேலும் பல நெருடல்களை ஏற்படுத்தி உள்ளது. ஆகவே, அவற்றிலிருந்து ஓரளவேனும் விடுபட்டு வாழ்வதற்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்கும் குடும்ப உறவினர்களிடையே புரிந்துணர்வை உண்டாக்குவதற்கும் வீட்டுத் தோட்டச் செய்கை வழிவகுக்கும்.

இன்று எங்கள் அரசியல்வாதிகள், எந்த நாட்டில் எப்படிக் கடன் அல்லது பொருள் வேண்டலாம்; எவ்வாறாக வேண்டலாம் என்ற மனநிலையிலேயே அலைவது வெளப்படையாகத் தெரிகின்றது. அத்துடன் அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் கொண்டு வருவதா, விடுவதா என்ற விடயமே பேசுபொருளாகவும் உள்ளது.

ஆனால், இவற்றை விடுத்து மக்களது வாழ்வியல் அமைப்பில் பொருளாதாரத் தாக்கம் ஏற்படுத்திய வடுக்களை தணிப்பதற்கான நடவடிக்கைகள் மந்தமாகவே உள்ளன. ஏன் குறைந்தபட்சம் ஆரோக்கியமான கலந்துரையாடல்களே ஆரம்பிக்கப்படவில்லை எனலாம்.

ஆகவே, தரிசு நிலங்கள் யாவும் வளம் கொழிக்கும் நிலங்களாக மாறட்டும். பாடசாலைக் காணிகள், கோவில்க் காணிகள் என அனைத்து நிலங்களும் காய் கனிகள் பூத்தக்குலுங்கும் தோட்டங்களாகட்டும். அதற்கு அடிநாதமாக மக்கள் மனங்கள் மாறட்டும். ஆம்! மனங்கள் மாறட்டும்! மாற்றங்கள் தொடங்கட்டும். ஆகவே, நீங்களும் வீட்டுக்குப் போகும் போது கண்டுகாலிகள் வேண்டிக் கொண்டு போங்கோ.....



### வெளிநாடு செல்வதை ஊக்குவிக்கும் அரசாங்கம்

# எச்சரிக்கை

## சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் போலி முகவர்கள்



ரஸீன் ரஸ்மின்
razeenrasmin87@gmail.com







இலங்கையில் இப்போது வரிசையில்லை என்றால்தான் அது ஒரு வியப்பாக பார்க்க வேண்டியிருக்கிறது. எரிபொருள், எரிவாயு என்பனவற்றோடு பொருட்களை கொள்வனவு செய்ய என்று, முழுக் குடும்பமும் வரிசையில்தான் நிற்கின்றது.

இன்று எமது நாடும், மக்களும் நடுத்தெருவுக்கு வந்துவிட்டனர். பலர் மன உளைச்சலுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். பொருளாதாரத்தில் கடும் நெருக்கடிக்கு மக்கள் முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு மேல், இலங்கையில் இருந்தால் குடும்பத்துடன் தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்ற நிலையில், இளைஞர்கள், யுவதிகள், பெயரியவர்கள் மாத்திரமின்றி, அரச உத்தியோகத்தர்களும் தொழில் நிமித்தம் வெளிநாட்டுக்கு செல்லும் ஒரு நிலைமையும் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

அதுமாத்திரமின்றி, இலங்கையில் வாழ முடியாது என்று எண்ணி, பல தொழிலதிபர்களும் தமது குடும்பத்துடன் நாட்டைவிட்டு வெளியேறி, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளை நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்து உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் தொழில்புரியும் அரச உத்தியோகத்தர்களும் தமது தொழிலுக்கு சம்பளமில்லா விடுமுறை பெற்று, மேலதிக வருமானத்தை தேடி வெளிநாட்டுக்கு செல்ல ஆரம்பித்துள்ளனர். இன்னும் சிலர் தமது அரச உத்தியோகம் இல்லாமல் போனாலும் பரவாயில்லை என்ற நிலையில், அரச உத்தியோகத்துக்கு நிரந்தர முழுக்குப் போட்டுவிட்டு, நிரந்தரமாக நாட்டைவிட்டு வெளியேறி வருவதையும் பார்க்கின்றோம்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் தலையீட்டுக்கு மத்தியில், அந்நிய செலாவணியை நாட்டுக்கு கொண்டு வர உடனடி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாகவும், அரச ஊழியர்களை வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்களுக்காக அனுப்ப சந்தர்ப்பம் வழங்கப்பட்டு உள்ளதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்துடன், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான திட்டம் தொடர்பிலான சுற்று நிருபம் தயாரிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

இன்று கடவுச்சீட்டு பெறுவதில் நீண்ட வரிசை காணப்படுகிறது. அதிலும் அரச உத்தியோகத்தர்களே அதிகமாக காணப்படுகின்றனர் எனச் சொல்லப்படுகிறது. வெளிநாட்டுக்கு செல்ல முயற்சிக்கும் அரச உத்தியோகத்தர்களில் அதிகமானோர் ஆசிரியர்கள் என்றே கூறப்படுகிறது.

இவ்வாறு ஆசிரியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதனால், இலங்கையில் கல்வி நிலைமை மேலும் பாதிப்படையக் கூடிய பாதகமான சூழ்நிலைக்குள் நாம் சிக்கிக் கொள்ள வேண்டிருக்கும். ஏனெனில், இப்போதும் இலங்கையில் கல்வி நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அதன் பின்னரான கொரோனா , மின்துண்டிப்பு என கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேல் இலங்கையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இப்போதுதான் நிலைமை ஓரளவுக்கு நிமிர்ந்து நிற்க ஆரம்பித்திருக்கின்ற போது, பொருளாதார நெருக்கடியைக் காணரமாக வைத்து, அனுபவமுள்ள பல ஆசிரியர்கள் கற்பித்தலுக்கு விடுமுறை வழங்கிவிட்டு, முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, நாட்டைவிட்டு வெளியேறிச் செல்லுதல் என்பது, எமது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு பெரிதும் சவாலாக அமையும்.

இலங்கையில் அந்நிய செலாவணியை கொண்டு வருவதற்காக, முழு முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வரும் இந்நிலையில்தான், இலங்கையில் இருந்து இளைஞர்களையும் யுவதிகளையும் அரசாங்க உத்தியோகத்தர்களையும் வெளிநாட்டுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

முதற்கட்டமாக அரச உத்தியோகத்தர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் இப்போது ஆரம்பித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கென வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில், பிரத்தியேகமாக முன்பதிவு செய்துகொள்வதற்கான இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது. பல அரச உத்தியோகத்தர்கள் முண்டியடித்துக்கொண்டு குறித்த இணைப்பில் தங்களை பதிவுசெய்து வருகின்றனர்.

இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுச் செல்லும் வீதமானது 286 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன. 2022 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 105,821 நபர்கள் தொழில் வாய்ப்புகளைத் தேடி, உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் மூலம் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளனர்.

கடந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 27,360 பேர் வேலைவாய்ப்புகளுக்காக நாட்டில் இருந்து வெளியேறியுள்ள அதேவேளை, இந்த எண்ணிக்கை இவ்வாண்டு 78,461 ஆக உயர்வடைந்துள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

அதிகபட்சமாக கட்டாருக்கு 19 ஆயிரத்து 133 பேரும் குவைத்துக்கு 12,701 பேரும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்துக்கு 11,000 பேரும் தென்கொரியாவுக்கு 1,754 பேரும் தொழில்வாய்ப்புகளுக்காக சென்றுள்ளனர்.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை காரணமாக வைத்து, பொதுமக்களும் அரச உத்தியோகத்தர்களும் தொழில்வாய்ப்புகளைத் தேடி வெளிநாடு செல்லும் இந்நிலையில், இதனைப் பயன்படுத்தி இப்போது பல போலி முகவர்கள் உருவாகி உள்ளமையும் தெரியவந்துள்ளது.


இளைஞர்கள், யுவதிகள், வீட்டுப் பணிப்பெண்களை இலக்கு வைத்து, இவ்வாறான போலி முகவர்கள் ஆசை வார்த்தைகளைச் சொல்லி, அவர்களிடமிருந்து பணத்தை பெற்றுக்கொள்ளும் ஒரு வேலையைச் செய்துவருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், எவ்வளவு பணம் போனாலும் பரவாயில்லை என்ற காரணத்தால் போலித் தரகர்கள் கேட்கும் பணத்தைக் கொடுத்துவிட்டு, இறுதியில் வெளிநாடு போக முடியாமலும், கொடுத்த பணத்தை திரும்ப பெற முடியாமலும் மேலும் கடனாளியாகும் ஒரு நிலைமை ஏற்பட்டுவிடச் சந்தர்ப்பமளிக்கக் கூடாது.

எனவேதான், வெளிநாடு செல்ல இருப்பவர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்த முகவர்கள் ஊடாக, அதற்கான பணிகளைச் செய்ய வேண்டும்.

அத்துடன், நீங்கள் பயணிக்க இருக்கும் முகவர் தொடர்பில் அல்லது வெளிநாடு செல்வது தொடர்பில் 1989 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்தி, மேலதிக ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே, இலங்கைக்கு அந்நிய செலாவணியைக் கொண்டுவரும் இந்த அரசாங்கத்தின் புதிய திட்டமானது, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், அது எந்தத் தரப்பினரையும் பாதிக்காத வகையில் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.



கச்சதீவை சொந்தம் கொண்டாட இந்தியாவுக்கு

# எந்த அருகதையும் இல்லை

ஒரு வரலாற்றுத் தடம்



மா. கணபதிப்பிள்ளை
(மாட்டீன்)



இன்று எல்லோராலும் பேசப்படுகின்ற கச்சதீவு பற்றிய வரலாற்றுத் தகவல்களை பார்க்கும்போது, கச்சதீவு ஆரம்ப காலத்தில் இலங்கைக்கு உரித்தானதாகவே இருந்தது. இது, நெடுந்தீவின் ஒரு பகுதியாகவே அமைந்திருந்தது.

நெடுந்தீவு 15 வட்டாரங்களைக் கொண்டது. அதில் நான்காம் வட்டாரத்தின் ஒரு பகுதியாக, கச்சதீவு இருந்தமைக்கான வரலாற்றுச் சான்று, நெடுந்தீவு பிரதேச சபையில் உள்ள பழைய குறிப்புகளில் காணப்படுகின்றது.

அதுமாத்திரமல்ல, 1961, 1971ஆம் ஆண்டு காலப்பகுதியில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட சிவப்பு, வெள்ளை நிறத்திலான துண்டு, கச்சதீவு அந்தோனியார் தேவாலயத்தில் நெடுந்தீவு மேற்கு கிராம சேவையாளரால் ஒட்டப் பட்டிருந்தது.

மேலும், கச்சதீவு அந்தோனியார் தேவாலயத்தின் கத்தோலிக்க மத மூப்பராக, ஆரம்பத்தில் நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த ஞானப்பிரகாசமும் இவரைத் தொடர்ந்து இவரது மகன் அந்தோனிப்பிள்ளையும் அவரைத் தொடர்ந்து அவரது ஞானக்குழந்தையான (தொட்டமகன்) அதிபர் அரியநாயகமும் கச்சதீவின் மூப்பர்களாக இருந்த வரலாறு, 2018ஆம் ஆண்டு வரையான குறிப்புகளாக் காணப்படுகின்றன.

கச்சதீவு ஆரம்பகாலத்தில், இலங்கை மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்று, இளைப்பாறும் இடமாகவும் வலை காயப்போடும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டது.

இலங்கை மீனவர்களின் குறிப்பாக, நெடுந்தீவு மீனவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், நெடுந்தீவு கத்தோலிக்க பங்குத் தந்தையால் கச்சதீவில் ஓர் அந்தோனியார் தேவாலயம் அமைக்கப்பட்டது.

கச்சதீவு அந்தோனியார் தேவாலயத்தின் பெருநாள் வந்ததும், நெடுந்தீவு கிழக்கு அந்தோனியார் தேவாலயத்தில் இருந்தே சுருவம், காவுவதற்கான கூடு எடுத்துச் செல்வார்கள்.

**நெடுந்தீவு 15 வட்டாரங்களைக் கொண்டது. அதில் நான்காம் வட்டாரத்தின் ஒரு பகுதியாக, கச்சதீவு இருந்தமைக்கான வரலாற்றுச் சான்று, நெடுந்தீவு பிரதேச சபையில் உள்ள பழைய குறிப்புகளில் காணப்படுகின்றது**

கச்சதீவு அந்தோனியார் தேவாலயத்தின் உற்சவம் தொடங்கியதும், நெடுந்தீவு மூப்பரின் தலைமையில் கச்சதீவில் கடைகள், மலசல கூடம் அமை ப்பதற்கான தடிகள், கிடுகுகள் என்பவற்றுடன் பங்குத் தந்தையும் அழைத்துச் செல்லப்படுவார்.

கச்சதீவைச் சூழ உள்ள கண்டமேடையும் கடலடித் தள மேடையும் மீன்பிடிக்க மிகப் பொருத்தமான இடமாகக் காணப்பட்டமையால் இந்திய மீனவரை கச்சதீவு கவர்ந்திழுத்தது. இதனால்தான் இந்தியர்கள் கச்சதீவின் மீது ஆர்வம் காட்டத் தொடங்கினர்.

இதைத்தவிர, 1958ஆம் ஆண்டு குடியுரிமை பறிக்கப்பட்ட மலையகத் தமிழர்களின் உரிமை தொடர்பாக சிறிமாவோ பண்டாரநாயக்கா - சாஸ்திரி உடன்படிக்கையின் அடிப்படையில், ஒருபகுதி மலையகத் தமிழர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

இலங்கையில் இருந்த மலையகத் தமிழர் குடியுரிமை அற்றவர்களாக வாழ்ந்தனர். புலம்பெயர்திருந்த தமது உறவுகளைச் சந்திக்கும் இடமாக, கச்சதீவு அப்போது அமைந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இந்தியா, கச்சதீவில் கவனம் செலுத்தத் தொடங்கியது. இதன் பின்னர், இந்த வரலாற்று உண்மைகளை முறையாக விளங்கிக் கொள்ளாத அன்றைய இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தி, இலங்கை பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவுடன் 1974இல் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், எந்த உரிமையும் இந்தியாவுக்கு இல்லாத போதும், இலங்கைக்கு கையளித்தது.

தற்போது கச்சதீவு தன்னுடையது போலவே, காட்டிக்கொள்ளும் இந்தியா, இந்த வரலாற்று உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். மேலும், இந்த உண்மைகளை 1972ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நெடுந்தீவு மகாவித்தியாலய வெள்ளிவிழா மலரில், இலட்சுமணராசாவால் ‘கச்சதீவு, நெடுந்தீவுக்குச் சொந்தம்’ என்ற கட்டுரையை, இக்கட்டுரைக்கு உசாத்துணையாகக் கொள்ளப்பட்டது.

1970 வரை இந்தியர்களுக்கும் கச்சதீவுக்கும் எந்தத் தொடர்பும் இருந்தமைக்கான எந்த ஆதாரம் வரலாற்றில் இல்லை. கச்சதீவு, இலங்கைக்குச் சொந்தமா, இந்தியாவுக்குச் சொந்தமா என்பது இன்றுள்ள பிரச்சினை இல்லை. கச்சதீவு, இலங்கையின் கடல் எல்லைக்குள் அமைந்திருப்பதையும் யாவரும் தெரிந்து வைத்திருத்தல் அவசியமாகும்.

இலங்கை மீனவர்களின் வலைகளை வெட்டி நாசமாக்கல், சட்டவிரோதமானதும் பொருத்தமற்றதுமான வலைகளைப் பயன்படுத்தல்; இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாது, கச்சதீவை மீளப்பெறல் தொடர்பாகப் பேசுதல், சிந்தித்தல் என்பவை மரபு, நியமங்களை மீறும் செயல் என்பதை, பொறுப்பானவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.






இளம் சமூகத்தின் விவசாய ஆர்வத்தை வளர்க்க

# உறுதுணை தேவை

க. அகரன்



தற்சார்ப்பு பொருளாதார பெருக்கம் தொடர்பான கருத்தியல் வலுப்பெற்றுள்ள நிலையில், இலங்கையின் உணவு உற்பத்தித் திறன் தொடர்பிலான மேம்பாடு அதிகரித்ததாகத் தெரியவில்லை என்ற குற்றச்சாட்டு ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை முகம் கொடுத்துள்ள இன்றைய நிலையில், பொதுமக்கள் துரிதமாக உணவுத் தேவையின்பால் அக்கறை செலுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

உணவுத் தேவைக்கு கூட, அதிகளவில் இறக்குமதி பொருட்களையே நம்பிய இலங்கையில், இன்று உள்நாட்டிலேயே தமக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்ற போது, அதனை உடன் மேம்படுத்துவது என்பது சாதாரண விடயமாகக் கொள்ள முடியாது.

விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்ட மக்களை மாத்திரமே, அதிகளவில் நம்பிக்கை வைத்து உற்பத்திப் பெருக்கத்தை மேற்கொண்ட எமது நாடு, இன்று அனைவரும் விவசாய உற்பத்தியில் ஈடுபட வேண்டிய தேவை ஏற்படுகின்ற போது, பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளது.

அனைவர் மத்தியிலும் ஆட்கொண்டுள்ள இலங்கையின் பொருளாதார பின்னடைவின் அச்சமானது, பலரையும் இன்று விவசாயத்தின் பக்கம் திரும்ப வைத்துள்ள போதிலும், அதற்கான காணிகள், உற்பத்திக்கான உரம், எரிபொருள் போன்ற முக்கிய பிரச்சினைகள் உட்பட இன்னோரன்ன பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படாமையால், விவசாயத்தின்பால் ஆர்வம் பின்னடிக்க வைத்துள்ளது.

இந்நிலை காணப்பட்டாலும் கூட இளைஞர் சமூகமொன்று, இன்று விவசாயத்தில் ஆர்வம் செலுத்தத் தொடங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. பாரிய அளவிலான முயற்சியாளர்களாக அன்றி, சிறிய விவசாய உற்பத்தி முயற்சியாளர்களாக அவர்கள் மாற்றம் பெற்றுள்ளமை, இலங்கையில் புதிய பரிமாணமாக பார்க்கப்பட்டாலும்கூட, இது இலங்கையின் உணவுத்தேவையை நிறைவேற்றாது போனாலும், தனிப்பட்ட குடும்பங்களை நாடு எதிர்கொள்ளப்போகும் பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து தப்பிக்க வழிவகுக்கும்.

இந்நிலையில், வன்னி பிரதேசத்தில் இளம் சமூகத்தினர் அதிகளவில் விவசாயத்தில் ஆர்வம் செலுத்தி வரும் நிலையில், அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு எவ்வித செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை.

வெறுமனே தரிசு நிலங்களை,

**நாடு எதிர்கொள்ளும் நெருக்கடியில் இருந்து ஒவ்வொரு குடும்பத்தையும் பாதுகாக்கும்**

**வன்னி பிரதேசத்தில் நீர் வளம், நில வளம் சிறப்பாக இருப்பதால் முறையாக பகிர்ந்தளித்தல் முக்கியம்**

**வனவளத் திணைக்களம் காணிகளைத் தமது ஆளுகைக்குள் வைத்திருப்பதால் பேரிடியே!**

விவசாய தேவைக்காக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இளம் சமூகம் விவசாயத்தில் ஆர்வம் செலுத்த வேண்டும் என்றும் ஒரு லட்சம் காணித் துண்டுகள் வழங்கி விவசாயத்தை ஊக்குவிக்கும் திட்டம் என, காலத்துக்கக் காலம் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கைகளையும் அது தொடர்பிலான சுற்றுநிருபங்களையும் தவிர, வேறு எதுவும் விவசாய நடவடிக்கை மேம்பாடு தொடர்பில் நடந்துவிடவில்லை.

வன்னி பிரதேசத்தில் நீர் வளம், நில வளம் சிறப்பாக இருக்கின்ற போதிலும் அதனை முறையான முகாமைத்துவத்தின் கீழ் பகிர்ந்தளித்து, உணவு உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி மேம்படுத்தும் தூர நோக்கு, எந்த அரசியல்வாதிகளிடமோ வடமாகாண விவசாய அமைச்சிடமோ இல்லாமை துர்திர்ஷ்டமே!

அரசாங்கத்தின் வெளியீடுகள் பார்வைக்கு சிறப்பாக இருந்தாலும் கூட, அதனை சுவை பார்ப்பது அரசியல்வாதிகளாகவே இருப்பது வேதனையான விடயமாக மாறியுள்ளது. வவுனியா போன்ற பிரதேசங்களில் வன இலாகாவின் ஆளுகையால், விவசாயத் தேவைக்கு பயன்படுத்தக்கூடிய பல நிலங்கள், பயன்பாடின்றி காணப்படும் நிலையில், தற்போது அவை தொடர்பில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள், ‘முதலைக் கண்ணீர்’ வடிப்பது, இளைஞர்களை அதனூடான விவசாயத்தில் ஆர்வத்தை உண்டு பண்ணுவது என்பதற்கு அப்பால், தமது கிரவல் வியாபாரத்துக்குத் தடையாக உள்ள வன இலாகாவினருடன் முட்டி மோதி சாதிப்பதற்கே பயன்படுத்திக் கொள்கின்றனர்.

வன்னி பிரதேசம் எக்காலப் பகுதியிலும் பயிர் செய்யக்கூடிய பிரதேசமாகக் காணப்பட்ட போதிலும், இங்குள்ள பல காணிகள் நீண்ட காலம் பயன்பாடற்றவையாகக் காணப்படுகின்றன. இவை புலம்பெயர் தமிழர்களின் காணிகளாகவும் காணிகளை துப்புரவு செய்வதற்கு போதுமான பணமற்ற மக்களினுடையதாகவும் ஒருபுறம் காணப்படும் நிலையில் மறுபுறம், இக்காணிகளில் பல வனவளத் திணைக்களம் தமது ஆளுகைக்குள் வைத்திருப்பதும் புதிய முயற்சியாளர்களுக்குப் பேரிடியே.

இவை தொடர்பில்,ஆர்வம் செலுத்திச் செயற்படுத்த வேண்டிய அரசியல்வாதிகள், தமது பக்க வருமான வழிகளைத் தேடுபவர்களாகவும், தமது வியாபார பெருக்கத்துக்கான நலனை முன்னிலைப்படுத்து பவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

இந்நிலை தொடருமானால், இளம் தலைமுறையினரை, விவசாயத்தில் தொடர்ச்சியாக ஆர்வம் செலுத்தும் காரணிகளுக்குள் வைத்திருப்பது சாத்தியமன்று.

இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் உணவு பஞ்சம் ஏற்படும் என பிரதமர் உட்பட முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் ஆகியோரால் சுட்டிக்காட்டப்பட்டு வரும் நிலையில், நாட்டில் பட்டினி சாவைத் தவிர்ப்பதற்கு, ஏதுவான நடவடிக்கைகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆவன செய்யப்பட வேண்டும் என்பதே, தற்போதைய தேவையாக உள்ளது.

இதற்கும் அப்பால் வன்னிப் பிரதேசத்தில் வெறுமனே அரச தொழில்வாய்ப்பை நம்பிய இளம் சமூகம், விவசாயத்தன்பால் ஆர்வம் செலுத்தத் தலைப்பட்டுள்ள நிலையில், இவர்களுக்கான உந்துதலை வழங்க வேண்டிய பொறுப்பை, அரசியல்வாதிகளும் விவசாயம் சார் அதிகாரிகளும் சாட்டுகள் சொல்லி, தட்டிக்கழித்துவிட முடியாது.



# மனங்களில் நஞ்சூட்டாதீர்

**பொன் விளையும் பூமியில் விவசாயம் செய்ய முடியாமல் தடுக்கப்பட்டுள்ளன.**

**பேரினவாதப் போக்கால் விவசாயத்துக்குப் பின்னடைவு**

ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com





ஒவ்வொருவரினதும் இருப்புக்கும், தங்களுக்கான பாதுகாப்பு உணர்வுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் நிலம் அவசியமானதாக இருக்கின்றது.

தனிமனிதர்களின் வாழ்க்கையில் மட்டுமன்றி, ஒரு சமூகத்தின் வாழ்க்கையிலும் சொந்தமான காணி, நிலம் முக்கியமாகின்றது. பொதுவாக, மொழி அல்லது மதம் இவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் சமூகங்கள் உருவாகின்றன. அவை தங்களது மொழியையும் மத, கலாசார பாரம்பரியங்களையும் பின்பற்றுவதற்கு, அச்சமூகங்களின் மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி இருந்தால்தான் சாத்தியமாகும்.

எனவே, ஓர் இனத்தின் மொழியையும் கலாசாரங்களையும் பாதுகாப்பதற்குக்கூட, அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகக் கூடி வாழ்வதற்கான காணி, நில உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

இதனால்தான் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், அடிப்படை மனித உரிமைகளைப் பிரகடனம் செய்தபோது காணியுரிமைகள் என்பது மனிதர்களின் சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளின் ஓர் அவசியமான அம்சமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதாவது, ஒரு தனிமனிதனோ, அல்லது ஒரு சமூகமோ தனது சமூக பொருளாதார கலாசார உரிமைகளை அனுபவிப்பதற்கு நில உரிமைகள் அத்தியாவசியமாகும், அது இல்லாமல் கொடுக்கப்படும் வேறெந்த உரிமைக்கும் அர்த்தமில்லை என்று தீர்வாகியது. அது மட்டுமல்லாமல், சொந்தமாக இருக்கும் காணிக்குரிய உரிமையோடுகூட, ஒரு சமூகம் தனது வாழ்வாதாரத்துக்காகத் தங்கியிருக்கும் நிலத்திற்கான உரிமையும் அச்சமூகத்துக்கு இருக்கின்றது என்று சர்வதேசச் சட்டங்கள் கூறுகின்றன.

உதாரணமாக, ஒரு சமூகம் தனது வாழ்வாதாரத்துக்கு அயலில் உள்ள காட்டை நம்பியிருக்கின்றதென்றால், அக்காட்டை அரசாங்கம் வேறெந்த அபிவிருத்தி முயற்சிக்கும் பாவிக்க முடியாது என்று தடை விதிக்கின்றது.

இலங்கையில் எல்டிஓ என்று நாம் பொதுவாகக் குறிப்பிடும் காணி அபிவிருத்திச் சட்டம் 1935ம் ஆண்டு (இங்கிலீஷ்காரர்களின் ஆட்சியின் கீழ்) முதலில் கொண்டுவரப்பட்டு பின் 1983ம் ஆண்டும் 1996ம் ஆண்டும் திருத்தப்பட்டது. இச்சட்டம் அரச காணிகளை எந்த அடிப்படையில் பகிர்ந்தளிக்கலாம் என்பதை நிறுவியது.

இது ஒருபுறமிருக்க,

நாடு தற்போது உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ளும் வேளை அம்பாறை மாவட்டத்தில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பொன் விளையும் பூமி விவசாயம் செய்ய முடியாமல் தடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்தக் காணிகளை அரசு உடனடியாக உரியவர்களிடம் உணவு உற்பத்திக்காக கையளிக்க வேண்டும் என பாதிக்கப்பட்டோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக, காணிகளை இழந்த பாதிக்கப்பட்டோர் அமைப்புகளின் பிரதிநிதிகளிளுடனான சந்திப்பு அட்டாளைச்சேனை மனித எழுச்சி அமைப்பின் அலுவலகத்தில் கடந்த 04ஆம் திகதி இடம்பெற்றது.

காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் இணைப்பாளர் கே. நிஹால் அஹமட் உட்பட பிரதேச காணி இழந்தோர் அமைப்புக்களின் பிரதிநிதிகளான விவசாயிகளும் துறை சார்ந்த செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டு காணி மீட்டெடுப்பு விடயத்தில் தமது ஆற்றாமை கலந்த ஆதங்கத்தை வெளியிட்டனர்.

இந்த விடயத்தில் அதிகாரிகள் தம்மை கிட்டத்தட்ட ஒரு விரக்தி நிலைக்கு இட்டுச் சென்றிருப்பதாகவும் பாதிக்கப்பட்டோர் அங்கலாய்க்கின்றனர்.

அங்கு கலந்துரையாடலின்போது கருத்துத் தெரிவித்த அமைப்பின் அம்பாறை மாவட்ட நில உரிமைக்கான கூட்டமைப்பின் பிரதிநிதிகள், நாடு உணவுப் பஞ்சத்தை எதிர்நோக்கும் என்று துறைசார்ந்த நிபுணர்களால் எச்சரிக்கப்பட்டிருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக உணவு உற்பத்தியில் சிறப்பான பங்கை வகித்த பொன் விளையும் பூமிகளான எமது காணிகள் அதிகாரிளால் தடுக்கப்பட்டிருக்கின்றன என்கின்றனர்.

திட்டமிட்ட நிலப்பறிப்புக்களால் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 4,652 குடும்பங்களினது 14,127 ஏக்கர் பரப்பளவான காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

இது விடயமாக, கடந்த காலங்களில் பல முன்னெடுப்புக்கள் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்தும் இந்தக் காணிகளை மீட்டெடுப்பதற்கான முன் முயற்சிகள் தொடருமென அங்கு வலியுறுத்தப்பட்டது.

மேலும் அங்கு கலந்து கொண்டிருந்த ஆண்களும் பெண்களுமான விவசாயிகள் தமது ஆற்றாமை கலந்த உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தினர்.

பாரம்பரிய விவசாய நிலங்களில் தொடர்ச்சியாக பயிரிட விவசாயிகளை அனுமதிக்க வேண்டும் பழைய சுற்றறிக்கை வழக்குகளை வாபஸ் பெறுங்கள் என ஜனாதிபதி அதிகாரிகளை அறிவுறுத்திய விடயத்தையும் பாதிக்கப்பட்டோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜனாதிபதியின் இந்தப் பணிப்புரை இவ்வாண்டின் ஜனவரி மாத இறுதிவாக்கிலேயே அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

பாரம்பரியமாக விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் நிலங்களை விவசாயிகளுக்குத் தொடர்ச்சியாக பயிரிட அனுமதிக்கும் புதிய சட்டதிட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் பழைய சுற்றறிக்கையின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை மீளப் பெறுமாறு ஜனாதிபதி கடந்த 30.01.2012 அன்று அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

பொதுமக்களிடமிருந்து வரும் கோரிக்கைகளைக் கவனத்திற்கொண்டு மக்களின் நலனுக்காக, புதிய சட்டங்களை வகுக்க நடவடிக்கை எடுக்குமாறு வன விலங்கு, வனப்பாதுகாப்பு, சுற்றாடல் மற்றும் காணி உள்ளிட்ட அனைத்துத் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார்.

தற்போதுள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட்டு, புதிய சட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்று கூறிய ஜனாதிபதி, பல ஆண்டுகளாக அரச நிறுவனங்களுடன் வழக்குகளில் சம்பந்தப்பட்டுப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

சிக்கல்கள் தீர்க்கப்பட்டு இறுதி செய்யப்பட்ட, 17,000 காணி உறுதிகளில் தான் கையெழுத்திட்டிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால், ஜனாதிபதியின் இந்த அறிவிப்பினால் தாங்கள் பயனடையவில்லை என அம்பாறை மாவட்டத்தில் அதிகாரிகளினால் நிலப்பறிப்புச் செய்யப்பட்டு கதியற்று நிற்கும் ஏழை விவசாயிகள் தமது ஏமாற்றத்தை வெளியிடுகின்றனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு பெரும்பான்மை அதிகாரிகளுக்கும் பெரும்பான்மை மக்களுக்கும் மட்டும்தானா என்று தமிழ்பேசும் சமூக விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர். இந்தக் கேள்வியில் ஒரு விரக்தியும் வெறுப்பும் இருக்கத்தான் செய்கின்றது.



**மக்களே! உஷாராக இருங்கள்**

# உயர் சிவப்பு வலயங்கள்

ஹஸ்பர் ஏ ஹலீம்
ahhasfar@gmail.com







உலகளவில் ஏற்படும் அனர்த்தங்கள் ஏதோ தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்படுகிறது. இயற்கை அனர்த்தங்களைப் போல் ஏதோ ஒரு வகையான நோய்கள் மக்களை ஆட்டிப்படைக்கின்றன.

கொரோனா வைரஸ் தாக்கம் போன்று டெங்குவின் தாக்கமும் திருகோணமலையில் ஆட்கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது . இதனால் மக்கள் அவதானமாக இருந்து தங்களை கொடிய நோயிலிருந்து பாதுகாக்கவும் முன்வர வேண்டும் பொடுபோக்காக இருந்தால் மரணங்களை சந்திக்க நேரிடும்.

திருகோணமலை கிண்ணியா பகுதியில் 2014 ம் ஆண்டளவில் 14 மரணங்கள் டெங்கினால் காவு கொள்ளப்பட்டுள்ளது. அதிலொரு கர்ப்பிணியும் அடங்குகின்றார்.

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் தாக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக இந்த வருடம் திருமலை மாவட்டத்தில் 770 டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ளனர்.

இதில்,திருகோணமலை கடற் படை தளத்தில் 111 நோயாளர்கள் அடையா ளப்படுத்தப்பட்டுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் வீ.பிரேமானந்த் தெரிவித்தார்.

டெங்கு வீரியம் அதிகரிப்பு உயர் சிவப்பு வலயங்களாக திருகோணமலை, கிண்ணியா, மூதூர், உப்புவெளி, குச்சவெளி போன்ற சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் இணங்காணப்பட்டுள்ளன. இதில் கிண்ணியா சுகாதார பிரிவில் ஆண் (வயது 38) ஒருவர் டெங்கு நோய் காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் மரணித்த சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

திருகோணமலை பகுதியில் 203 நோயாளர்களும், மூதூரில் -203, கிண்ணியா -77,உப்புவெளி -76 என டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ள நிலையில் 2021 ஆம் ஆண்டு 312 நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். இம்முறை அது 770 ஆக அதிகரித்துள்ளது. இதனை கருத்தில் கொண்டு அரசாங்கம் டெங்கு வாரமாக மே 18 தொடக்கம் 24 வரை பிரகடனப்படுத்தி, சுகாதார தரப்புடன் முப்படையினர் இணைந்து டெங்கொழிப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறான கொடிய நோயிலிருந்து பாதுகாக்க பொது மக்கள் அவதானமாக செயற்படவும் தங்களது வீடுகள் காணிகளை சுத்தமாக வைத்திருக்கவும் பாவிக்காத மலசல கூடங்களை கவனமாக நீர்தேங்காத வண்ணம் சுத்தப்படுத்துவதுடன் வெற்றுக் காணிகளையும் உரிய நேரத்தினுல் சுத்தமாக பேணவும் அது போன்று பாடசாலைகள் அரச திணைக்களங்களில் தினசரி டெங்கொழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் சுத்தத்தை பேண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொது மக்களை கேட்டுக் கொள்வதுடன் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக வைத்தியரை நாடவும் மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின் இரத்த பரிசோதனையை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதில் பொடுபோக்காக இருக்க வேண்டாம். சில பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு பணியின் போது லாவா குடம்பிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் அவதானமாக மக்கள் செயற்படவேண்மென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வீடுகளில் நீரை சேமித்து வைக்கும் வாளி குடம் பரல்கள் தாங்கி என்பனவற்றிலும் மலசலகூட வாளி குளியலறை வாளி பக்கட் பறவைகளுக்கு நீர் வைக்கும் பாத்திரம் பக்குகள் தடாகங்களிலும் கினறுகளிலும் பாவிக்காத மலசலகூடங்கள் மூடப்படாத மலசலகூட குழிகள் சுற்றுப்புறங்களில் வீசப்பட்ட சிரட்டை பேனி யோகட் கப் போத்தல்களிலும் கீழே உள்ளன போன்று (தெறி புழு) போன்ற அமைப்பு காணப்படுகின்றனவா?

இவைதான் நுளம்பு குடம்பிகளாகும் என சுகாதார தரப்பு மக்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளது.

ஒவ்வொருவரும் உணர்ந்து செய்யும் போதே கொடிய ஆட்கொல்லி டெங்கிலிருந்து பாதுகாப்பெற முடியும்.

டெங்கு நோய் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க மக்கள் கரிசனையுடன் செயற்படுவதுடன் நுளம்பு தாக்கம் பரவாத வண்ணம் சூழலையும் அதனை அண்டியுள்ள பகுதிகளையும் சுத்தமாக பேண வேண்டும். வடிகான்களில் நீர் தேங்கி நிற்காத அளவுக்கும் லாவா குடம்பிகள் இல்லாதளவுக்கு நீரை வடிந்தோடக்கூடிய வகையில் சுத்தத்தை திறம்பட பேண வேண்டிய தருணமாக இருக்கிறது. திருகோணமலை நகர் பகுதியில் சில குடியிருப்பு நெருக்கமாக காணப்படுவதுடன் வடிகான்கள் துப்புறவற்ற நிலையில் உள்ளது இவ்வாறான விடயங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் கண்காணித்து செயற்பட வேண்டும்.முப்படையினர் டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த களத்திற்கு சென்று செயற்படுவதுடன் சுகாதார தரப்புக்கள் டெங்கின் தீவிரத்தை கட்டுப்படுத்த புகை விசிறும் நடவடிக்கை என பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். பொது மக்கள் இந் நோயிலிருந்து பாதுகாக்க முன்கூட்டிய திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டும் இல்லாது போனால் பல மரணங்களை சந்திக்க நேரிடும்.

**என்ன செய்யவேண்டும்?**

- நீர் தேங்கும் மற்றும் சேமித்து வைக்கப்படும் பாத்திரம்/பொருட்களில் உள்ள நீரை அகற்றி சுத்தம் செய்தல் வேண்டும்.
- நீரை சேமித்து வைக்கும் ஒவ்வொரு தடவையும் வாளி, குடம், பரல்கள், தாங்கி என்பற்றை பழைய நீரை அகற்றி சுத்தம் செய்த பின்னரே புதிதாக நீரை சேமிப்பதுடன் பாதுகாப்பாக மூடி வைத்தல் வேண்டும்,
- கிணறுகளுக்கு கப்பி வகை மீன்கள் இடுவதுடன் சிறிய இடைவெளி கொண்ட வலை இட்டு மூட வோண்டும்.
- பாவிக்காத கிணறுகள் மற்றும் மூடப்படாத மலசலகூடகுழிகளுக்கு அபேட் இடல் வேண்டும்.

# மக்கள் தலையில் கட்டிவிடுதல் வெகு தொலைவில் இல்லை

சில நியாயமான குணம் படைத்தவர்களைத் தவிர, மற்றையவர்கள் எல்லோரும், தவறிழைக்கும் போதெல்லாம் தப்பித்துக் கொள்வதற்காக, தங்களுக்கு கீழிருப்போரிடம் பந்தை தள்ளிவிட்டுவிடுவர். அதிலேயே பலரும் குறியாகவும் இருப்பர். அதேபோல், கீழிருப்போரின் ஆலோசனையால் ஏதாவதொரு திட்டம் வெற்றியிலக்கை அடைந்துவிடுமாயின், தாங்கள்தான் செய்தோமென பெயர்போட்டுக் கொள்வர். பல துறைகளிலும் இவ்வாறான 'ஜால்ரா'க்கள் இருக்கத்தான் செய்கின்றனர்.

தோல்வியை தோல்வியாகவும், வெற்றியை கூட்டுமுயற்சியால் கிடைத்ததெனவும் நிலைநிறுத்தி, பகிர்ந்துகொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல், கால் இழுப்புகளும் கழுத்தறுப்புகளும் இருக்கத்தான் செய்யும். அவை முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷவின் இறுதி ஊடகவியலாளர் சந்திப்பின் போது அளிக்கப்பட்ட பதில்களின் ஊடாக நன்றாகவே புலப்பட்டுள்ளது.

நாட்டின் நெருக்கடிக்கு, கண்டறியப்பட்ட தவறுகளைத் திருத்திக்கொண்டு காலவோட்டத்துக்கு ஏற்றாற்போல, முன்னோக்கி நகரவே வேண்டும். 1948 ஆம் ஆண்டுமுதல் விட்ட பிழைகளையும் தவறுகளையும் தேடித்தேடி, விமர்சனங்களை முன்வைத்துக்கொண்டிருந்தால், இன்னும் பல ஆண்டுகளுக்குப் பின்னால் செல்லவேண்டிவரும்.

அரசியல், அரச நிர்வாகத்தில் ஏற்பட்ட தவறுகளால், நாடு படுமோசமான நிதி நெருக்கடிக்குள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றது. அதிலிருந்து மீண்டெழுவதற்கு ஒவ்வொரும் கடுமையாக முயற்சிக்கவே வேண்டும். ஆனால், தங்களை அதிகாரத்துக்குக் கொண்டுவந்த மக்களும் இதற்குப் பொறுப்புக்கூறவேண்டுமென, சகல பிழைகளையும் மக்களின் தலையில் சுமத்திவிட்டு பசில் ராஜபக்‌ஷ தப்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றார்.

அவ்வாறு அவர் கூறியதிலும் ஓரளவுக்கு உண்மையிருக்கிறது. பசில் ராஜபக்‌ஷ, மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்லர். தேசிய பட்டியலின் ஊடாக பாராளுமன்றத்துக்குள் நுழைந்தவர். அவரை கொண்டுவருவதற்கான சட்டமுடிச்சு, அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் ஊடாகவே அவிழ்க்கப்பட்டது. அதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை கொடுத்தவர்கள் மக்கள் பிரதிநிதிகள் ஆவர்.

ஆக, ஜனநாயகத் தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே, தன்னை பாராளுமன்ற உறுப்பினராக்க, முடிச்சை அவிழ்த்தனர். ஆகையால், தம்மை அதிகாரத்திற்கு கொண்டுவந்த பொதுமக்களும் பொறுப்பு கூற வேண்டுமென கூறியிருப்பதில் தவறில்லை.

மக்களே! ஆட்சிப்பீடம் ஏறும்வரைக்கும் அண்ணன் தம்பியாக நினைக்கும் அரசியல்வாதிகளை நன்கறிந்து நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அடுத்தடுத்த தேர்தல்களின் போது, உங்களுடைய ஜனநாயக உரிமையை மிகச்சரியாக பயன்படுத்திக்கொள்ளுங்கள். இல்லையேல் நீங்கள் இட்ட புள்ளடியே தவறானது என விளக்கம் கொடுப்பர்.

வரிசையில் நின்று, நீங்கள் இட்ட புள்ளடியால் வரிசையிலேயே நின்றுக்கொண்டிருக்கின்றனர் என்பதை நினைவில் கொண்டு, எப்போதுவேண்டுமானாலும் மக்களின் தலையிலேயே தவறுகள் சுமத்தப்படும் என்பதையும் மறந்துவிடவேண்டாம்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கும் மக்களே காரணமென கூறுவது வெகுதொலைவில் இல்லை என்பதால். கடந்தகாலங்களில் நீங்கள் முகங்கொடுத்த கசப்பான அனுபவங்கள், வேதனைகள், சோதனைகளை மறந்துவிடவேண்டாமென நினைவூட்டுகின்றோம்.


தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# 'மாற்றான் தாய் மனப்பான்மை'

**லக்ஸ்மன்**

மாற்றான் தாய் மனப்பான்மையின் காரணமாகத்தான் பல முயற்சிகள் வெற்றிபெறாமலேயே இடைநடுவில் முறிந்து போகின்றன. நம் நாட்டின் நிலைமைக்கு இதுவே முக்கியமான காரணம்.

ஒரு கொடியின் கீழ் நாங்கள் இருக்கத்தயார் என்று சொல்லப்பட்டாலும் அதனை ஏற்பதற்குத் தயாரில்லாவிட்டால், விட்டுக்கொடுப்பதற்கு மனதில்லாது போனால் என்னதான் செய்யமுடியும்? 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' நிலைமையில் இருக்கும் போது கூட, அதற்கு மனமில்லையானால் சொல்வதற்கு ஒன்றுமில்லைதான்.

நேற்றைய தினம் தூரப் பயணம் ஒன்றின் போது தேநீருக்காக பஸ் நிறுத்தப்பட்டது. அப்போது சந்தித்த ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் ஒருவர், சொன்ன விடயம் மனதைத் தொட்டது. "ஜப்பான் நாட்டில் 50 பழங்கள் ஓர் இடத்தில் விற்பனைக்கு இருக்கும்போது வருகின்ற ஒருவர் தனக்கு அவ்வளவையும் வாங்க வேண்டும் என்றிருந்தாலும் அங்கு 20 பேர் இருக்கிறார்களென்றால் இரண்டோ மூன்றோதான் பெற்றுச் செல்வார். ஆனால் நம்நாட்டில் மூடை மூடையாக வீடுகளில் குவித்து வைக்கிறோம்" என்றார். இவ்வாறான மனோநிலை நம்மிடம் எப்போது வரப்போகிறது?

நாட்டில் பெரும் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. அது அன்றாடம் கூலித் தொழில் செய்பவர்களைத்தான் அதிகம் பாதிக்கிறது. அதன் காரணமாக ஒன்று அவர்கள் அதிக விலை கொடுத்துப் பொருட்களைப் பெறவேண்டிய நிலை ஏற்படுகிறது. இல்லையானால், தரமற்ற பொருள்களை நுகர வேண்டி அல்லது குறிப்பிட்ட பொருட்களை கொள்வனவு செய்யாதிருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபை, உலக உணவுத் திட்டத்தின் மாதாந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்ற விடயங்கள், இந்த இடத்தில் நினைவு படுத்தப்பட வேண்டும். 'இலங்கையிலுள்ள குடும்பங்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமானோர் குறைந்த அல்லது மலிவான உணவை உண்கின்றனர். இலங்கைக் குடும்பங்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமானோர் மலிவு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட உணவை உண்பதாகவும், இது ஊட்டச்சத்துக் குறைபாட்டின் அபாயத்தை உயர்த்தியுள்ளது. தொடர்ச்சியாக இரண்டு போகங்களிலும் நெல் அறுவடை குறைவதால் உணவுப் பாதுகாப்பின்மை அதிகரிக்கும்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிவாரணங்களும், உதவிகளும் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன. இவற்றில்கூட முழுமையாக நேர்மை கடைப்பிடிக்கப்படுகிறதா என்று ஆராய்வதற்கு முன்னர், பெற்றுக்கொள்பவர்களாகிய நாம் நம்மைவிடவும் சிரமப்படுபவர் யாருக்காவது இதனைக் கொடுங்கள் என்று கூற முயல்வதில்லை. அல்லது, அவ்வாறானவர்களுக்கு நாமே கொடுப்பதற்கும் முயல்வதில்லை. முழு நாட்டின் சுமையையும் சுமக்க வேண்டியவர்கள் நாம் என்ற அடிப்படையில், ஒருவகையில் கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தம் நம்மையெல்லாம் கையேந்துபவர்களாக மாற்றிவிட்டது. நம்முடைய முயற்சியும் உழைப்பும் காணாமல் போனதையிட்டு நாம் இப்போது கவலைப்படுவதில் பிரயோசனம் இல்லை. இதற்கு அரசியல் மாத்திரம் காரணமல்ல என்பதையும் இந்த இடத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

இந்திய அரசாங்கத்தால் நிவாரணங்கள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து சீனா வழங்கியது. பின்னர் சில தினங்களுக்கு முன்னர் பாகிஸ்தான் அரசாங்கத்தாலும் நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் எதிராக யுத்தம் நடைபெற்ற காலங்களில் இடம்பெயர்வுகளும் அகதி வாழ்க்கைகளுமே அதிகம்.

அக்காலங்களில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், உலக உணவுத்திட்டம் போன்ற பெரிய நிறுவனங்களாலேயே நிவாரணங்கள் வழங்கப்பட்டன. அன்றைய காலங்களில் அதிகமான சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இங்கு பணியாற்றியிருந்தன. வடக்கு- கிழக்கிலேயே அதிகமான பிரதேசங்கள் அகதி முகாம்களுடன் காணப்பட்டன. சர்வதேச தொண்டு நிறுவனங்கள் விடுதலைப் புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்தவுடன் அரசாங்கத்தால் வெளியேற்றப்பட்டன. அவை கடந்த காலக் கதைகள். இப்போது மீண்டும் இங்கு ஏற்பட்டிருக்கின்ற நிலையால், கடனையும் நிவாரணங்களையும் எதிர்பார்த்துக் காலங்கடத்த வேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

உரத்தினை மானிய அடிப்படையில் வழங்காவிடினும் சாதாரண விலைக்கேனும் வழங்குவதற்கான எந்த நடவடிக்கையினையும் அரசாங்கத்திடம் காணவில்லை. இது எதிர்வரும் அறுவடைக்காலத்தில் விளைச்சலையே வீழ்ச்சிக்குக் கொண்டு செல்லும். நாம் ஒவ்வொருவரும் இவ்விடயம் குறித்து கருத்திலெடுக்க வேண்டும். எனவே உரப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை அரசாங்கம் விரைவில் வழங்கவேண்டும். அது மிக முக்கியமானதாகும்.

ஆனால் ஜனாதிபதி கொண்டுவந்த சேதன விவசாயக் கொள்கை தவறென்று யாரும் சொல்லவில்லை. இன்றைய காலச் சூழல் அதற்குப் பொருத்தமல்ல என்றே சொல்கிறார்கள். இப்போது தொடங்கியிருக்கின்ற வேளாண்மைச் செய்கையாயினும் விளைச்சலைத்தர வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்க வேண்டிய நிலையிலேயே விவசாயிகள் இருக்கின்றனர். காரணம் இம்முறையேனும் நேர காலத்துக்கு இரசாயன உரம் கிடைக்குமா என்பதுதான். இந்திய உதவித்திட்டத்தில் உரம் ஒரு மாதத்துக்குள் கிடைத்துவிடும் என்று அமைச்சர் கூறியிருந்தாலும் அது நிறைவேறுமா என்று விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாட்டு விலை அகற்றல், மிக மோசமாக சாதாரண மக்கள் முதல் நடுத்தர மக்களையும் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியது. வர்த்தகர்கள் முதல் சாதாரண வியாபாரிகள் வரையில் தாம் நினைத்த விலையை நினைத்த நேரத்தில் பொருட்களுக்கு நிர்ணயிக்கின்ற நிலைமையானது நாட்டில் மிக மோசமானதொரு பொருளாதாரச் சிக்கலைக் கொண்டுவந்திருக்கிறது. அரசாங்கமானது இந்த விடயத்தில் பொறுப்பற்று நடந்திருக்கிறது என்பதனை ஏற்றுக் கொள்ளவேண்டும். எனவே விரைவில் கட்டுப்பாட்டு விலை மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும். அது முக்கியமானதாகும்.

நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்டதாகவே அரசாங்கம் இருத்தல் வேண்டும். ஆனால் இப்போதைய நிலையில் நம்முடைய நாட்டில் அவ்வாறில்லை அப்படியில்லையானால் அரசாங்கம் என்ற ஒன்று எதற்காக என்ற கேள்வி ஏற்படுகிறது. இது அனைத்து மக்களிடமிருந்து வெளியில்வரத் தொடங்கியிருக்கிறது. எரிபொருள் பிரச்சினை நாட்டில் மிக மோசமாகப் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டு வருகிறது. பெற்றோல், டீசல், எரிவாயு என்று இப்போது மண்ணெண்ணையையேனும் தாருங்கள் என்று மக்கள் கேட்கும் இழி நிலைக்கு நாடு சென்றுவிட்டது. இனி வரும் காலத்தில் விறகும் இல்லை என்றாகிவிடும் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் அதனையும் வசதிபடைத்தவர்கள் பதுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

சாதாரண விலைகளில் மக்களால் இப்போது பொருள்களை எங்கும் கொள்வனவு செய்யமுடியவில்லை. கொடுக்கப்பட்ட பரீட்சைகளில் தோற்றவர் ஜனாதிபதியாக இருக்கமுடியாது. ஆனால், நம்முடைய ஜனாதிபதி தோல்வியடைந்த ஜனாதிபதியாக தன்னால் பதவி விலகமுடியாது. தனக்கு 5 வருடங்களுக்கு ஆணையை மக்கள் வழங்கியதாக தெரிவிக்கிறார். கட்டாயமாக ஐந்துவருடங்கள் இருங்கள் என்று மக்கள் தேர்வு செய்தார்களா என்பதுதான் இந்த இடத்தில் கேள்வி. கால வரையறையை அவர் எந்தவகையில் நிர்ணயிக்கிறார் என்பது தெரியவில்லை. மக்கள் வாக்களித்துத் தெரிவு செய்தவரை வேண்டாமென்று சொல்லும் போது அவர் வெளியேறுவதே கௌரவம். ஆனால் அது அவருக்கு விளங்கவில்லை போலும். அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் வெளியேறுமாறு இளைஞர்கள் களத்தில் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் இப்படியான ஒரு கருத்தை ஜனாதிபதியால் எவ்வாறு கூறமுடிகிறது என்பதும் புரியவில்லை.

நாட்டு மக்கள் இன்று பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். என்னுடைய குடும்பத்திற்கு இன்று உணவு கிடைக்குமா என்றே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குடும்பஸ்தரும் சிந்திக்கின்ற நிலைமை அரசாங்கத்தின் செயற்பாடுகளால் ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தீர்த்துவிட்டுச் செல்வாராயின் அது சரி. இல்லாமல் ஆட்சிக் கட்டிலைக் கட்டிப்பிடித்துக் கொண்டு சுகபோகத்துடன் வாழ்வதில் எந்த அர்த்தமும் இல்லை.

தவறான தீர்மானங்களால் உருவாகியிருக்கின்ற இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதே இன்றைய நிலையில் அவசியமாகும். நாட்டில் நடைபெற்ற யுத்தம், அதனால் ஏற்பட்ட பெரும் நிதி நெருக்கடிக்குள் நாடு இருக்கையில் ஒவ்வொன்றாகச் செய்யத்துணிந்த இறுமாப்பு வீணாகிப் போனதென்றே சொல்லலாம்.

கடந்த வருடத்தில் உரம் இன்மையால் நாட்டில் அரிசி விலை அதிகரித்துவிட்டது. அது தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்த விலை அதிகரிப்பைக் கட்டுப்பதுத்துவதற்கு கட்டுப்பாட்டு விலையில் விநியோகிப்பதனை கண்காணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் தேவை என்பவர்கள் எந்த விலையையும் கொடுத்து கொள்வனவு செய்யத் தயாராக இருக்கையில் இந்தக் கட்டுப்பாட்டு விலை எந்தளவுக்குத் தாக்கம் செலுத்தும் என்பதே கேள்வி. அது தவிரவும் பல பொருட்களின் விலைகள் அதிகரித்துவிட்டன.

1977களில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்றதொரு வாழ்க்கையை எம் அடுத்த சந்ததி பார்த்துவிடக்கூடாது என்பதற்காக விரைந்து செயற்படவேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் மாத்திரமல்ல, அனைத்து தனிப்பட்ட ஒவ்வொருவரும் இருக்கிறோம்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதைத் தவிர வேறு நோக்கமில்லாது நகர்வதற்கான தேவை உருவாகியிருக்கிறது.

நாணய மதிப்பிறக்கம் முதல், பொருளாதார பிரச்சினைகளின் அதிகரிப்பு வரை ஏற்பட்டிருக்கும் இறுக்கம் தீர்வதற்கு அடிப்படை மாற்றங்களே அவசியமாகும்.



## வாழ்வியல் தரிசனம்

ஒரு சிலருக்கு வாழ்க்கையில் சில பிரச்சினைகள், துன்பங்கள் வந்தால், சுற்றியிருக்கும் உறவினர்கள், நண்பர்கள், "உங்களுக்கு காலம் சரியில்லை; எனவே, எதுவும் செய்யாமல் இருங்கள். காலம் மாறிவிட்டதும் பழைய நிலைக்கு வரலாம்" என்று புத்திமதி கூறுவார்கள்.

அவர்கள் இப்படிச் சொன்னால், சும்மா ஒருவரால் இருக்க முடியுமா? துணிச்சலுடன் தங்கள் கடமைகளை நிறுத்த முடியுமா? எவ்விதமான துன்பங்கள் சூழ்ந்தாலும், வேலைகளை ஒத்திவைக்க முடியாதல்லவா?

ஆனால், பிரச்சினைகளுக்குள்ளும் உட்புகுதல்கூடாது. காரியங்களில் அவதானம் தேவை. எதிரிகள் மறைந்தே காரியங்களைச் செய்வார்கள். பய உணர்வுடன், தமது அன்றாடக் கடமைகளை, விருப்பமின்றி ஒதுங்கி நடக்க முயல்வது, கருமங்களை ஒத்திவைப்பது போன்ற செயல்களை நிறுத்திவிட வேண்டும்.

வாழ்க்கை இயல்பானது. இதைக் கஷ்டமான விடயம் என்று ஒருபோதும் மனதில் நினைக்கக்கூடாது. ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் ஒவ்வொருவரும் செயற்பட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். இவை உங்களுக்குத் தெரியாதா? எல்லாமே நடக்கும்; என்றும் உங்கள் பணிகள் தொடரட்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கந்தளாயில்

## குழாய் வெடித்து நீர் வீண்விரயம்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் நீர்ப்பாசன பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், மூன்று இடங்களில் குடிநீர் குழாய் வெடித்து குடிநீர் வீண்விரயமாகிக் கொண்டிருக்கின்றது.

சுமார் 25 நாள்களுக்கு மேலாக, இவ்வாறு நீர் வீணாகிபோவது, பலரையும் கந்தளாய் நீர்ப்பாசன பிரிவின் பொறுப்பற்ற போக்குக் குறித்து விசனமடைய வைக்கின்றது.

கந்தளாய் பிரதேசத்தின் அனோமா சந்தி, வெலிங்டன் சந்தி, ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்துக்கு முன்னாலும் இவ்வாறு குடிநீர் இரவு, பகலாக அளவுக்கதிகமாக வெளியேறிக் கொண்டிருக்கின்றது. அப்பகுதி மக்கள், கந்தளாய் பிராந்திய அலுவல்கள் அலுவலகத்தில் முறைப்பாடு செய்தும் இதுவரைக்கும் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நாட்டில், பாரிய பொருளாதார நெருக்கடி நிலவிக்கொண்டிருக்கும் காலகட்டத்தில், இவ்வாறு குடிநீரும் வீண்விரயம் செய்யப்படுவதை அப்பகுதி மக்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே, ஒரு துளி நீரையும் வீணாக்க மாட்டோம் என்ற வரலாற்றுக் கூற்றுக்கு ஏற்ப, நீரை வீணாக்காமல் இருக்கக்கூடிய வகையில் கந்தளாய் பிராந்திய அலுவலகம் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எப். முபாரக்



# காரைதீவின் காவல் தெய்வம் கண்ணகை அம்மன்



விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா







**வைகாசி பிறந்துவிட்டால் கிழக்கின் பட்டிதொட்டி எல்லாம் பறையொலி முழங்க, குழல்நய ஓசையெழுப்ப, வைகாசிப் பொங்கல் நடைபெறுவது வழமை. எனினும், கடந்த மூன்று வருட காலமாக சஹ்ரான் பிரச்சினை, கொரோனாதாக்கம் போன்றவற்றால் வைகாசிப் பொங்கல் சோபிக்கவில்லை.**

தற்போது பாரிய பொருளாதார நெருக்கடி என்றாலும், கண்ணகை அம்பாள் திருக்குளிர்த்தி சடங்கு, சிறப்பாக நடைபெற்று வருகிறது. கிழக்கில் பெரும்பாலான தமிழ்க் கிராமங்கள் இச்சடங்கினால் களைகட்ட ஆரம்பித்துள்ளன. திங்கட்கிழமை (06) வைகாசித் திருவிழாச் சடங்கு ஆரம்பமாகியது.

கண்டி அரசன் இரண்டாம் இராஜசிங்கன் காலத்தில் (1629-1637) பாடப்பெற்ற தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஊர் சுற்றுக் காவியத்தில், மட்டக்களப்புப் பிராந்தியத்தில் 30 கண்ணகை அம்மன் ஆலயங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில், அங்கணாமைக்கடவை (வெளியிலிருந்தும்) முதலூராகக் குறிப்படப்பட்டுள்ளது. எனவே அதுவே முதல் ஆலயமாகக் கொள்ளலாம்.

'பட்டி நகர் தம்பிலுவில்
வீரமுனை காரைநகர்
பவுசுபெறு கல்முனை
கல்லாறெருவில் மகிளூர்
செட்டிபாளையம்
புதுக்குடியிருப்பு
செல்வமுறு மகிழடித்தீவு
முதலைக்குடா
அட்ட திக்கும் புகழும்
வந்தாறுமூலை நகர்
மட்டவிழ் பூங்குழல்
மண்முனைக் கண்ணகையை
மனதில் நினைக்க வினை மாறி
ஓடிடுமே' என ஊர்சுற்றுக் காவியம் கூறுகிறது.

பிரசித்திபெற்ற காரைதீவு கண்ணகை அம்மனின் திருக்குளிர்த்தி சடங்கு திங்கட்கிழமை (06) கடல்நீர் எடுத்துவந்து, கல்யாணக்காலல் நடலுடன் ஆரம்பித்தது. எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடைய இருக்கிறது.

சேர மன்னனின் அழைப்பின் பேரில், இலங்கை மன்னன் கஜபாகு முப்பெரும் விழாவுக்குச் சென்றபோது, கஜபாகு மன்னனின் அழைப்பின் பேரில், சேரன் செங்குட்டுவனின் வழிவந்த சேனாதிராசனின் விதவை மகளான தேவந்தி அம்மையார், தனது மகள் சின்ன நாச்சியாருடன் கதிர்காம யாத்திரை நோக்கமாக இலங்கை வந்தார்.

அம்மையார் வரும்பொழுது, தன்னுடன் பத்தினித் தெய்வத்தின் மூன்று சிலைகளை கொண்டு வந்ததாகவும் அவற்றில் இரு சிலைகள் அகோர வடிவுடையனவாகவும் ஒன்று சாந்த சொரூபமான வடிவம் கொண்டதென்றும் வரலாறுகள் கூறுகின்றன.

அம்மையாரின் யாத்திரை வழியில், ஏறாவூரில் சிலைகளில் ஒன்றை ஸ்தாபித்து வழிபட்டார். பின்னர், காரைதீவு எனும் பழம்பெரும் பதியில் வந்து தங்கினார் . தேவந்தி அம்மையார், காரைதீவில் விருந்தோம்பலில் கவரப்பட்டு, அங்குள்ள வேம்பு மரத்தின் கீழ், தான் கொண்டுவந்த இரு விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்து பூசை வழிபாடு இயற்றினார்.

இக்காலத்தில், கண்டி அரசனின் ராஜ பிரதிநிதியாகிய வன்னிமை, அவரது மனைவி சகிதம் சிங்காரத் தோப்பில் இருந்து யானை மீதேறி நகர்வலம் வந்தார். அவர், அம்மையாரின் பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டார். அங்கு வன்னிமையின் மனைவியின் கண்ணொளி கிடைக்கப்பெற்றமை வரலாறு.

இதற்காக வன்னிமை, அங்கு புனித ஆலயத்தை ஸ்தாபித்து அதனை நிர்வகிப்பதற்கு நூற்றி ஒரு ஏக்கர் நெல் காணியை நேர் கடனாக வழங்கினார். இதனை 'கண்கண்வெளி' என அழைப்பர். இன்றும் அது உள்ளது.

கிராமத்தில், தேவந்தி அம்மையாரும் மகளான சின்ன நாச்சியாரும் வாழ்ந்து வருகையில், குடிமக்களின் பிள்ளைப்பேறு குறைந்து கொண்டு சென்றது. இதற்கு காரணமாக அமைந்த பத்தினி தெய்வத்தின் அகோர வடிவத்தை, மக்களின் கோரிக்கையின் படி ஜனசந்தடி அற்ற ,பட்டிமேடு என்னும் கிராமத்தில் தேவந்தி அம்மையார் பிரதிஷ்டை செய்தார் .

அழகு நிறைந்த சின்னநாச்சியார் மீது மையல் கொண்ட இளைஞர்கள், அம்மையாருக்கும் அவரது மகளுக்கும் தொந்தரவு கொடுத்தனர். அதன் காரணத்தால் சாந்த சொரூபமான பத்தினி தெய்வ விக்ரகத்துடன் தம்பிலுவில் கிராமத்துக்கு இடம்பெயர்ந்து விக்கிரகத்தை அங்கு வைத்து வழிபட்டு வந்தார்.

இந்நிலையில், காரைதீவு கிராம மக்களுக்கு கொள்ளை நோய், அம்மை நோய் என்பன துயரங்களைக் கொடுத்தன .இதன் காரணமாக, மக்கள் தம்பிலுவில்கிராமத்துக்குச் சென்று, தேவந்தி அம்மையாரை மன்றாடி மீண்டும் காரைதீவுக்கு அழைத்து வந்து, பத்தினி தெய்வத்தை பிரதிஷ்டை செய்து அம்மையாரின் வேண்டுகோளின்படி, கற்புக்கரசி கண்ணகி குளிர்விக்கும் பொருட்டு பொங்கலிட்டு பெருவிழா எடுத்தனர்.

இப்பெரு விழாவில் கொம்பு முறித்தல், போர்த் தேங்காய் உடைத்தல், தட்டு, வசந்தன் போன்ற நிகழ்வுகள் நிகழ்ந்தன என்பது வரலாறு கூறும் செய்திகள் ஆகும்.

பெருவிழா வைகாசித் திங்களில் வருடா வருடம் ஆரம்பிக்கின்றது. முதல் நாள் பட்டயம் கூறுகின்ற நிகழ்வும் இடம்பெற்று வந்தது. வைகாசிப் பொங்கல் திருக்குளிர்த்தி குழுத்தி எனும் நாமங்கள் அழைக்கப்பட்டு வந்த இந்தச் சடங்கு இன்றும் தொடர்ந்து நடைபெறுவது அம்பாளின் அனுக்கிரகமே.

பொதுவாக ஈழநாட்டிலுள்ள கண்ணகி அம்மன் ஆலயங்களில் திருவிழா தமிழ் மாத வைகாசி பவுர்ணமியில் இடம்பெறும் . ஆயினும் காரைதீவு மற்றும் வற்றாப்பளையில் திருவிழா வைகாசி பௌர்ணமி திங்கட்கிழமை நடைபெறும். ஆயினும் திங்கட்கிழமை அல்லது வைகாசி பவுர்ணமியில் பௌர்ணமிக்கு அடுத்து வரும் திங்கட்கிழமை நடைபெறுவது மரபாகும்.

இவ்வாலயத்தின் திருவிழாவானது குளிர்த்தி நடைபெறும் திங்கட்கிழமைக்கு முன்வரும் திங்கட்கிழமை அன்று சமுத்திர தீர்த்தம் எடுத்தவுடன் கல்யாண கால் நடுவது உடன் ஆரம்பமாகின்றது. இங்கு கல்யாண காலாக பூவரசம் மரமே தெரிவு செய்யப்படுவது மரபாகும்.

சமுத்திரத்திலே தீர்த்தம் எடுத்து வரும் பொழுது ஏலவே தெரிவுசெய்யப்பட்ட மெய்யன்பர் ஒருவரின் காணியில் உள்ள பூவரச மரத்தில் உள்ள பூவரசு மரத்தின் கிளையை ஆயுதம் பாவிக்காமல் முறித்து, அதனை சமுத்திர தீர்த்தத்துடன் ஆலயத்திற்கு கொண்டு செல்வார்கள்.

ஆலயத்திலேயே பத்தினி தெய்வத்திற்கு முன்பாக பூவரசு மரக்கிளையை நட்டு கப்புகனார் கிரியைகள் செய்து, கூறை சேலை அணிவித்து ஆலயத்தில் உணர்வு பூர்வமாக நடுவார்கள்.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு கல்யாண காலுக்கும் அம்பாளுக்கும் பூஜைகள் நடைபெற்று பின்னர், உடுக்கை அடித்து ஊர் சுற்று காவியம் பக்தர்களால் பாடப்பெறும்.

மறுநாள் புதன்கிழமை தொடங்கி ஞாயிறு வரைக்கும் பகல் ஒரு மணிக்கு அம்பாளுக்கு பூசையும் மாலை 7 மணிக்கு மணிக்கு அம்பாளுக்கு உடுக்கை அடித்து ஊர்சுற்றுக்காவியம் பாடுதலுடன் 5 நாட்களில் நிகழ்வு நிறைவு வரும் .

ஐந்து நாட்களிலும் பத்தினி தெய்வத்தின் பகல்பூஜை செய்யும்போது அம்பாளுக்கு சோறும் கறியும் படைக்கப்படும். இதனை பச்சை கட்டுதல் என்று அழைப்பார்கள்.

இவ்வாலயத்தில் அம்பிகை அடியார்களுக்கு வழங்கப்படும் மரபுரீதியான சிறப்பான பிரசாதம் சோறும் கறியும் ஆகும் .

இறுதி நாளான திங்கட்கிழமை முழுநாளும் பூஜைகள் இடம்பெறுவதில்லை. அன்றைய தினம் பக்தர்கள் நேர்த்திக் கடன்களை செலுத்துவார்கள் ஆண்கள் அங்கப்பிரதட்சணம் செய்தும் பெண்கள் கற்பூரச்சட்டி எடுத்தும் காவடி எடுத்தும் நேர் கடன்களை செலுத்துவார்கள்.

அன்றைய தினம் பக்தர்கள் உபவாசமிருந்து பத்தினி தெய்வத்திடம் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு வேண்டி விரதம் அனுஸ்டிப்பார்கள். திங்கள் முழு நாளும் பக்தர்களால் சிலப்பதிகாரக் கதைபாடப்படும்.

இறுதிநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு அம்பாளுக்கு சிறப்பான விசேட பூஜை இடம்பெற்று தொடர்ந்து குளித்திபாடல் பாடி வழிபடுவர்.

பத்தினித் தெய்வமாம் கண்ணகி அம்மனை குளிர்விக்கும் பொருட்டு (குரச்சி) கலயத்தில் மந்திரிக்கப்பட்ட தூய நீரில் வெற்றிலை பாக்கு வாழைப்பழம் தாமரைப் பூக்கள் சிலம்பு அம்மானைக் காய் என்பவற்றுடன் அம்பாளின் தல விருட்சமான வேம்பு மரத்தின் பெறப்பட்ட இலைகளால் பாடல்களின் கருத்துகளுக்கு ஏற்ப கலயத்தில் எடுத்துச்செல்லப்படும் நீர் தெளிக்கபடும்.

அவ்வேளையில் ,எட்டு திசைகளிலும் இருந்து வழிபடும் அம்பிகை அடியார்கள் மீது கலயத்தில் உள்ள தீர்த்தம் வேப்பிலைக் கொத்தால் தெளிக்கப்படும். இறுதியில் குளிர்த்தி பாடல்கள் பாடி முடித்ததும் கப்புகனாரால் மங்கல கீதம் பாடப்பெற்று சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

குளிர்த்தி முடிந்து. அடுத்து வரும் திங்கட்கிழமை அம்பாளுக்கு எட்டாம் சடங்கு இடம்பெறும். பிற்பகல் 3 மணியில் இருந்து கிராமத்து மக்கள் அங்கு தனித்தனியாக புதிய நெல்லில் இருந்து பெறப்பட்ட அரிசியை கொண்டு பொங்கலிட்டு நேர்த்தி செய்வார்கள். இது ஆலயத்தின் விசேஷமான அம்சம் என்பதை குறிப்பிடலாம்.

யாழ் நூல் தந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாவையும் சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தாவையும் இந்நாட்டிற்கு ஈன்றளித்த கற்பின் தெய்வம் கண்ணகி தாயை காரைதீவு தமிழ் கிராம மக்கள் குலதெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் வழிபட்டு வருகின்றார்கள்.

---

### கண்ணிவெடி அகற்றும் தன்னார்வ நிறுவனம் 'ஸார்ப்'

# நிலங்களிலும் மனங்களிலும் பணிகள்



சுப்பிரமணியம் பாஸ்கரன்



இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து,13 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும், இன்றும் வெடிபொருட்கள் ஒரு பெரும் சவாலான விடயமாகவே காணப்படுகின்றன. அதாவது, மீள்குடியேற்றப் பகுதிகளில் இதன் பாதிப்புகள், மக்களின் வாழ்வாதாரத் தொழிகளைச் செய்ய முடியாமலும் அவர்களின் நடமாட்டங்களின் போது உயிர் அச்சுறுத்தும் வகையில் இன்றும் கானப்படுகின்றன.

அன்மையில் கூட, கிளாலிப் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் வெடிப்புச் சம்பவம் ஒன்றில் காயமடைந்திருந்தமை, இத்தகைய ஆபத்தான நிலைமையின் ஓர் எடுத்துக்காட்டாகும்.

இலங்கையின் உள்நாட்டுப் போரில் பயன்படுத்தப்பட்ட இந்த வெடி பொருட்களை அகற்றும் பணிகள், கடந்த 13 ஆண்டுகளாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் இவ்வாறான ஆபத்துக்கள் காணப்படுகின்றன.

நீண்ட கால யுத்தம் இடம்பெற்று, 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்றதா பின்னர், எட்டு வருடங்களுக்குப் பின்னர், 2017ஆம் ஆண்டு கண்ணிவெடிகளை தடைசெய்யும் சமவாயத்தில் 163ஆவது நாடாக இலங்கை இணைந்து கொண்டது.

நடந்து முடிந்த போரில், இரு தரப்பினராலும் புதைக்கப்பட்ட ஏராளமான கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை, பல சர்வதேச உதவி நிறுவனங்கள் ஏற்றுக் கொண்டு, ஏறத்தாள ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட கண்ணிவெடிகளை அகற்றும் பாரிய பொறுப்பை, இந்தத் தன்னார்வத் தொன்டு நிறுவனங்கள் பொறுப்பேற்று முன்னெடுத்து வருகின்றன.

முப்பது வருடங்களாகத் தொடர்ந்த உள்நாட்டுப் போரில், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, வருமானங்களை இழந்த நிலையில், வாழ்வதற்கு வழி தெரியாது பரிதவித்த பலரையும், புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்தோரைப் பணியாளர்களாக இணைத்துக்கொண்டு, அவர்களுக்குத் தொழில்வாய்ப்பை வழங்கி, இந்தப் பாரிய பொறுப்பை மேற்படி தன்னார்வத் தொன்டு நிறுவனங்கள் முன்னெடுத்து வருகின்றன.

இலங்கையின் வடக்கில், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலில் ஈடுபடும் ஒரு முன்னிலை நிறுவனங்களில் ஒன்றாக 'ஸார்ப்' என்ற தன்னார்வ கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் திகழ்கின்றது. ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் நிதியுதவியுடன், மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் அரச சார்பற்ற நிறுவனமான 'ஸார்ப்' 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாத தொடக்கத்தில் தனது பணிகளை ஆரம்பித்திருந்தது.

இன்று வரையான காலப்பகுதியில், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம், தச்சடம்பன் பகுதிகளிலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சுதந்திரபுரம் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை, ஆனையிறவு ஆகிய பகுதிகளிலும் வெடி பொருட்களை அகற்றும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகிறது. .

2022 மே மாதம் வரையும் 20 இலட்சத்து 82 ஆயிரத்து 45 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து 33 ஆயிரத்து 670 அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனைவிட, வைத்திய சாலைகளுக்கான குருதிக் கொடை, பாடசாலை மாணவர்களுக்கான







உதவிகள், சிரமதானப் பணிகள் எனப் பல்வேறுபட்ட சமூக சேவைகளையும் 'ஸார்ப்' தன்னார்வத் தொண்டு நிறுவனம் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆபத்து மிக்க இந்தப் பணிகளில் பெண்கள் பலர் துணிச்சலுடன் ஈடுபட்டு வருகின்றார்கள். 'ஸார்ப்' கண்ணிவெடி அகற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் பணியாளராக இணைந்து பணியாற்றி வரும் பெண் தலைமை தாங்கும் குடும்பத்தைச் சேர்ந்த சசிகுமார் வனிதாமணி (வயது 32) என்பவருடன் இதுபற்றி உரையாடியபோது, "நான் பெரிய பரந்தன் பிரதேசத்தில் வசித்து வரும் "ஒரு பெண் தலைமைத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர். எனது கணவர் 2009ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக உயிரிழந்தன் பின்னர், என்னுடைய குடும்பப் பொறுப்பை நானே முழுமையாகப் பொறுப்பேற்று, செயற்பட்டு வருகின்றேன். கடந்த காலங்களில் வருமானங்கள் இன்றி, யுத்தத்தால் பல்வேறு துன்ப துயரங்களை அனுபவித்து கொண்டு இருந்தேன். ஆனால், இந்தக் கண்ணிவெடி அகற்றும் பணிக்காக இணைந்து, இந்தத் தொழில் ஆபத்தான ஒரு தொழில் என்பதால், பலர் இந்தத் தொழிலை விரும்பாத நிலையிலும், நான் ஒரு பெண்ணாக, இந்தப் பணிக்காக என்னை இணைத்துக் கொண்டேன். காரணம், மற்றவர்களிடம் கையேந்தி வாழக்கூடாது. என்னுடைய உழைப்பில் நானே வாழ வேண்டும் என்ற ஒரு வைராக்கியத்துடன்இணைந்து கொண்டேன்.

"இப்போது என்னுடைய தாயையும் எனது சகோதரியின் ஒரு குழந்தையையும் என்னுடைய குழந்தையையும் பரமரித்து வருகின்றேன். இதற்கு இந்த நிறுவனம் எனக்குக் கை கொடுத்து இருக்கின்றது. அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்து, இதுவரை காலமும் என்னுடைய வாழ்க்கையை நடத்தி இருக்கின்றேன். எதிர்காலத்தில் இந்தப் பணி நிறைவு பெற்றாலும், எனக்கு ஒரு வாழ்வாதார உதவி கிடைத்து, நான் ஒரு நிலையான வாழ்வாதாரத்தை பெற்றவராக இருப்பேன் என்ற நம்பிக்கையையும் உள்ளது.

அதாவது, தினமும் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து, வீட்டு வேலைகளைச் செய்துவிட்டு, பாடசாலை செல்லும் இரண்டு பிள்ளைகளுக்கும் சகல ஏற்பாடுகளையும் செய்து, 4.30 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு, என்னுடைய பணி இடத்துக்குச் செல்வேன். அதன் பின்னர் வீடு திரும்பி, மீண்டும் வீட்டு வேலைகளை கவனிப்பதும் மறுநாள் இப்படி செல்வதுமாக இருக்கும்.

"ஆனால், இந்த தொழில் மிகவும் ஓர்ஆபத்தான தொழில். இதை பலர் விரும்பாத தொழிலாக இருக்கலாம். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் எங்களுடைய மக்களுக்கான மீள்குடியேற்றம், விவசாய நடவடிக்கைகள், உட்கட்டுமான வசதிகளை மேற்கொள்ள கூடிய வகையிலே, இந்த ப்பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்" என்று மிகவும் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

இதேபோன்று, இந்தப்பணியில் ஈடுபட்டு வரும் இரண்டு குழந்தைகளின் இளம் தாய் ஒருவரைச் சந்தித்து, இது தொடர்பிலேயே உரையாடிய போது, "எனக்கு இரண்டு பிள்ளைகள்; இரண்டு பிள்ளைகளும் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். எனது கணவர் கூலி வேலை செய்து வருகிறார். ஆனால், கூலி வேலை எல்லா நேரமும் கிடைக்காது; கிடைக்கின்ற சந்தர்ப்பத்திலே வேலைகள் கிடைக்கும். ஏனைய நாள்களில் எங்களுக்கு எந்தவிதமான வருமானமும் இருக்காது. அதனால், ஒரு நிரந்தரமான வருமானம் இல்லை; ஒரு வருமானத்தை தேட வேண்டிய தேவை இருந்தது. அந்த அடிப்படையிலேயே இந்தக் கண்ணிவெடி அகற்றும் பணியில் இணைந்துகொண்டிருந்தேன். இந்தப் பணியில் இரண்டு வருடங்களுக்கு மேலாகப் பணி செய்து வருகின்றேன். இது உண்மையாகவே ஓர் ஆபத்தான தொழில் என்றாலும், அதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு மிகவும் பாதுகாப்பாக முன்னெடுக்கப்படுகின்றது" என்றும் தெரிவித்தார்.

இவ்வாறு பலருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குகின்ற ஒரு பணியையும் அதோடு மீள்குடியேற்றம், உட்கட்டுமானம், விவசாய நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான ஒரு மனிதாபிமான நடவடிக்கையாகவும் இந்தக் கண்ணி வெடி அகற்றும் பணியில், 'ஸார்ப்' நிறுவனம் ஈடுபட்டு வருகின்றமை பெரும் பேறாகும்.







# ‘கண்ணகை புகழ் பாடுவோம்’

## இறுவட்டு வெளியீட்டு

மட்டக்களப்பு, தாண்டவன்வெளி, குளக்கட்டு கண்ணகியம்மன் கோவில் அலங்கார திருச்சடங்கு உற்சவம், வெள்ளிக்கிழமை (03) ஆரம்பமாகி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (14) திருக்குளிர்த்தி பாடி அம்மன் உற்சவம் நிறைவுபெறவுள்ளது.

பூம்புகார், ஏரன்ஸ் வீதி, வாழ் மக்களால் இரண்டாம் நாள் சடங்கு உற்சவத்தை சிறப்பிக்கும் முகமாக சனிக்கிழமை (04) இரவு பூசைகள் நடைபெற்றன. இதன்போது, குழந்தையடி பிள்ளையார் ஆலய கட்டட நிதிக்காக மங்கையக்கரசி குடும்பத்தினரின் அனுசரணையில் ‘கண்ணகை புகழ் பாடுவோம்’ எனும் பக்தி பாடல் அடங்கிய இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இறுவட்டும் வெளியீட்டு விழாவில், ஆலய பிரதம குரு சிதம்பரசாந்தரூபக் குருக்கள், ஆலய பிரதம பூசகர் சித்திரவேல் ஐயா மற்றும் ஆலய நிர்வாகத்தினர், மங்கையக்கரசி அம்மையாரின் குடும்ப சந்ததியினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(படங்களும் தகவலும்: வ. சக்தி)






### வில்லூன்றி மகோற்சவத்தை முன்னிட்டு

# சைவநெறி பரிசளிப்பு விழா

யாழ். வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு, ‘வெண்கரம்’ அமைப்பு நடத்திய சைவநெறிப் பரீட்சையின் பரிசளிப்பு விழா, கொட்டடி ‘வெண்கரம்’ அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (05) நடைபெற்றது.

‘வெண்கரம்’ பிரதான செயற்பாட்டாளர் மு. கோமகன் தலைமையில், ஆரம்பகல்வி மாணவர்களின் தேவாரம், யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமான இந்நிகழ்வின்போது, பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மட்டுமன்றி ஏனையோருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பரிசளிப்பு விழாவுக்கு சமய, சமூக செயற்பாட்டாளர் திருமதி கமலேஸ்வரி கனகசபை, கொட்டடி நமசிவாய வித்தியாலய ஓய்வுநிலை பிரதி அதிபர் திருமதி பத்மமலர் சிவகடாட்சம், பெற்றோலியக் கூட்டுத்தாபன ஓய்வுநிலைப் பணியாளர் எஸ். சண்முகேந்திரன், ஓய்வுநிலை ஆசிரியை திருமதி பவானிதேவி தயாபரநாதன் மற்றும் பெற்றோர், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

‘அக்கினிக் குஞ்சு’ அமைப்பின் அனுசரணையுடன் இப்பரீட்சை நடத்தப்பட்டு, மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

(படங்களும் தகவலும்: என். பொன்ராஜா)





























# ‘எமது பிரதேசத்திலும் விஞ்ஞானிகளை உருவாக்குவோம்’

‘எமது பிரதேசத்திலும் விஞ்ஞானிகளை உருவாக்குவோம்’ என்ற தொனிப்பொருளில், கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் விஞ்ஞான கண்காட்சி நடைபெற்றது. தரம் 06 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களால் விஞ்ஞானம், தொழில்நுட்ப பிரயோக கண்காட்சி புதன்கிழமை (08) கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் எஸ். சந்தியாகு தலைமையில் நடைபெற்றது.

கண்காட்சி நிகழ்வில், பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் கலந்து சிறப்பித்தார். பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. ஹிகானா அலீப், உதவிக் கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்) எம். எஸ் சஹறதுல் அமீன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். சரவணமுத்து, இளம் கண்டுபிடிப்பாளர் சோ. வினோஜ்குமார் உட்பட விஞ்ஞான பாட ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர். இக்கண்காட்சியில் சுமார் 250க்கு மேற்பட்ட மாணவர்களின் படைப்புகள், பிரயோக ரீதியாக கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

(படங்களும் தகவலும்: காரைதீவு சகா)



# தெணியானுக்கு அஞ்சலி

ஞாயிற்றுக்கிழமை (05) கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் பணிமனையில் நடைபெற்ற முற்போக்கு எழுத்தாளர் தெணியானின் அஞ்சலி நிகழ்வின் காட்சிகள்....

(படங்களும் தகவலும்: சபா தனுஜன்)















விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 11 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.